# அடுத்தடுத்து இரண்டு கர்ப்பிணித் தாய்மார் மரணம்: சத்திர சிகிச்சையில் தவறு?

Riegstered as a News pape in Ceylon விலைசதம் 15

ஈழநாடு சந்தா

தினப் பதிப்பு

மூன்று மாதம் — ரூ. 18-00

ஆறு மாதம் — ரூ. 34-00

ஒரு வருடம் — ரூ. 66-00

# ஈழநாடு

EELANADU

National Tamil Daily

தபால்பெட்டி எண்: 49

போன்: 389

மலர் 11

இதழ்: 67

தேசிய தினசரி

ஈழநாடு சந்தா

வாரப்பதிப்பு மாத்திரம்

மூன்று மாதம் — ரூ. 4-00

ஆறு மாதம் — ரூ. 7-50

ஒரு வருடம் — ரூ. 14-00

முற்பணம் கட்ட வேண்டும் தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் சித்திரை 7 ஸபர் 1 சனிக்கிழமை 19-4-69]

யாழ்ப்பாணம், சனி

கர்ப்பிணித் தாய்மார் அடுத்தடுத்து சத்திரசிகிச்சை அறைக்குள் இரவு நேரத்திலேயே மரணமானது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி பிரசவ வார்ட்டிலுள்ள கர்ப்பிணிகளுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினமிரவு ஒன்பதுமாதக் கர்ப்பிணித்தாய் ஒருவர் சத்திர சிகிச்சையின்போது மரணமானதும், குழந்தை உயிருடன் வெளியே எடுக்கப்பட்டதும் தெரிந்ததே.

நேற்றிரவும் மற்றொரு நிறைமாதக் கர்ப்பிணித் தாய் சத்திர சிகிச்சையின்போதே மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அடுத்தடுத்து சத்திர சிகிச்சை அறைக்குள்ளேயே கர்ப்பிணித்தாய்மார் மரணமாவதன் மர்மம் என்ன என்பதுபற்றி எவருக்குமே காரணம் தெரியவில்லையாம்.

ஒன்பதுமாதக் கர்ப்பிணி மரணமானது சம்பந்தமாக விசாரணை நடாத்திய மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் சத்திரசிகிச்சையில் ஏற்பட்ட பிழைபாடு காரணமாக மரணம் நிகழவேண்டி ஏற்பட்டது என்று தீர்ப்பு வழங்கியிருந்தார்.

இதைத்தொடர்ந்து இரவு நேரத்திலேயே இரண்டாவது மரணமும் நடைபெற்றது.

போதிய மருந்துகளும், ஆயுத உபகரணங்களும் கைவசமிருப்பதாக ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரிதெரிவித்தபோதும், அடுத்தடுத்து இப்படியான மரணம் நிகழ்ந்தது ஆஸ்பத்திரி வட்டாரங்களிலும், கர்ப்பிணிகள் மத்தியிலும் மட்டுமன்றி, பொதுமக்களிடையேயும் பெரும் பரபரப்பை உண்டுபண்ணியுள்ளது.

(கா. நி.

# தமிழரசுக் கோரிக்கைக்கு எதிர்க்கட்சியினர் மறுப்பு

## இக்கட்டான நிலையில் சபாநாயகர்

கொழும்பு, சனி

மக்கள் பிரதிநிதிகள்சபையில் எதிர்க்கட்சி வரிசையில் தமிழரசுக்கட்சியினருக்கு முன் ஆசனங்கள் வழங்குவதற்கு எதிர்க்கட்சியினர் மறுத்துள்ளனர்.

தமிழரசுத் தலைவர்கள் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் எம். பி., டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் எம். பி. ஆகியோருக்கு எதிர்க்கட்சி வரிசையில் முன் ஆசனங்கள் வழங்கப்படவேண்டுமென தமிழரசுக்கட்சியினர் சபாநாயகரிடம் விடுத்திருந்தகோரிக்கைக்கு எதிர்க்கட்சியினர் அவ்விதம் இணங்கமுடியாதென மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

தேசிய அரசாங்கத்தை விட்டு விலகுவதென்றும் எதிர்க்கட்சியாக செயல்படுவதெனவும் தமிழரசுக் கட்சி தனது சமீபத்திய மகாநாட்டில் முடிவுசெய்ததைத் தொடர்ந்து சபாநாயகரிடம் மேற்படி வேண்டுகோளை விடுத்திருந்தது.

இப்போது எதிர்க் கட்சி வரிசையில் முன் ஆசனங்களிலுள்ளவர்களை பின் ஆசனங்களுக்கு செல்லும்படி கூற முடியாத நிலையில்சபாநாயகர் இருப்பதால் இது சம்பந்தமாக ஒரு சமரச முயற்சியில் இப்போது அவர் ஈடுபட்டுவருவதாகத் தெரியவருகிறது.

தமிழரசுக்கட்சி இரண்டாவது பெரும்பான்மை பலம் கொண்ட எதிர்க்கட்சியாக இப்போதிருப்பதால் தமக்கு முன் ஆசனங்கள் ஒதுக்கப்பட வேண்டுமென வற்புறுத்தியுள்ளது.

# அல்லாரை கொலை வழக்கு: ஆறு எதிரிகளும் விடுதலை

யாழ்ப்பாணம், சனி

அல்லரை கொலைவழக்கில் ஆறு எதிரிகளும் விடுதலை செய்யப்பட்டனர். விசாரணை நடுவில் ஜூரிசபையினர் ஏகமனதாக விசாரணையைத் தொடர்ந்து நடத்தத் தேவையில்லையென்றும்எதிரிகள் குற்றவாளிகளல்லவென்றும் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து நீதிய்ரசர் எதிரிகளை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில் அல்லாரையில் 68-ம்ஆண்டு மே மாதம் 8-ம் திகதி முத்து தில்லையம்பலம், நமசிவாயம் காசிநாதர், கந்தையா தம்பிராசா, வைரமுத்து நாகநாதி, வல்லி சின்னத்தம்பி, முத்து கனகசபை ஆகியோர் கொலைசெய்யும் நோக்கத்துடன் கூட்டம் கூடியதாகவும் 2-ம் எதிரியான காசிநாதர் ராமு காத்தியேசுவைக் கொலைசெய்ததாகவும் கூட்டம் கூடியதால் எல்லோரும் இக்கொலைக் குற்றத்துக்குள்ளாகியிருக்கிறார்களென்றும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

1-ம், 2-ம், 3-ம். 4-ம், 6 ம், எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் ஜி.ஜி. பொன்னம்பலம் கியூ. சி, அட்வகேட் எஸ். நடராசாவின் உதவியுடனும், புறக்டர் எஸ். கே திரவியநாயகம், புறக்டர் வி. ஆனந்தசங்கரி ஆகியோரின் அனுசரணையுடனும் ஆஜரானார். 5-ம் எதிரி சார்பில் அட்வகேட் எஸ். நாகராசா, புறக்டர் எஸ். கே. திரவியநாயகத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் அட்வகேட் கே. சிவபாக்கியநாதன் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் ரஞ்சித் குணதிலகா ஆஜரானார்.

விசாரணையைப் பார்ப்பதற்குக் கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் பெண்கள் உட்பட ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

காங்கேசு கார்த்திகேசு சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

எதிரிகளையும் இறந்தவரையும் தெரியும். சம்பவம் நடந்ததினம் காலை 8 மணிக்கு தோட்டத்தில் இறந்தவரும், விஞசித்தம்பியும், நானும் புகையிலைக்கன்றுகளுக்குத் தண்ணீர் இறைத்

(4-ம் பககம் பார்கக)



# 'தீண்டாமை ஒழிவதற்கு

வடக்கில் பொலிஸ் வாரத்தில்

# இரண்டு கொலைகளும் இரண்டு விபத்து மரணமும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கரிடம் மேற்படி வேண்டு கோளை விடுத்திருந்தது.

முயற்சியில் இப்போது அவர்

பட வேண்டுமென வற்பு றுத்தியுள்ளது.

# ‘தீண்டாமை ஒழிவதற்கு சட்டத்திருத்தம் அவசியம்’

யாழ்ப்பாணம், சனி

தீண்டாமை பிரச்னை சிக்கிரமாக தீர்க்கப்பட்டால் தமிழினத்திற்கு விமோசனம் உண்டு. இந்தப் பிரச்னையை சில இடதுசாரி இயக்கங்கள், அரசியல் லாபம்பெறுவதற்காக பயன்படுத்தி இரத்தக்களரி ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். இதனை எந்தக் காலத்திலும் பலாத்காரம் மூலம் தீர்க்க முடியாது பிரசாரம் மூலமும், சட்ட நடவடிக்கை மூலமுமே இப்பிரச்னையை தீர்க்கவேண்டும்.

தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளர் திரு. ஏ. அமிர்தலிங்கம், தீண்டாமை பிரச்னை பற்றி நமது நிருபர்களிடம் மேற்கண்டவாறு கருத்து தெரிவித்தார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:- காலஞ்சென்ற கோப்பாய் எம். பி. திரு. சி. வன்னியசிங்கம், திருக்கோணமலை எம். பி. திரு. என். இராசவரோதயம் ஆகியோரின் தீர்மானத்தை அடுத்து ஆட்சிமன்றத்தில் 57-ம் ஆண்டு சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு சட்டம் கொண்டு வரப்பட்டது. பரிசோதனைக்காக சட்ட நடவடிக்கை மூலம், ஆலயங்கள், தேநீர்க்கடைகள், பாபர் சலூன்களில் உரிமையை நிலைநாட்ட முயற்சித்தோம். நமது கட்சி வழக்கறிஞர்கள் சில வழக்குகளில் வாதாடி வெற்றியும் பெற்றுள்ளார்கள்.

தொண்டமனாறு செல்வச் சந்நிதி பூசகருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டபடியால் தான் அக்கோயில் சகல மக்களுக்கும் திறந்துவிடப்பட்டது. சன்னதிகோவில்வழக்கில், குற்றமடிக்கப் படாமலிருந்தால், நிலைமை வேறுவிதமாகஇருந்திருக்கும்.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில், முன்னாள் வவனியா எம். பி. திரு. ஸி. சுந்தரலிங்கம், தொண்டர்களின் உதவியுடன் பலாத்காரமாக தடைசெய்தார். அதே நேரத்தில் மறுபக்கத்தில் இடதுசாரிகள் கிடைத்த வாய்ப்பை கெடுத்துவிட்டார்கள். அதனால் தான் அப்படியான நிலைமை அங்கு ஏற்பட்டது. திரு. சுந்தரலிங்கத்தின் செயலைக் கண்டிக்கிறோம்.

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலில் இடதுசாரிகளின் பலாத்கார இயக்கம் ஆரம்ப முதல் இடம் பெற்றதால் நாங்கள் தொடர்புகொள்ளவில்லை.

தற்போதுள்ள சமூகஏற்றத்தாழ்வு ஒழிப்பு சட்டத்தின் பலம் போதாது. சட்டம் வலுவுள்ளதாகவும், சட்டத்திலுள்ள சில விஷயங்களை தெளிவாக்கவும் அபராதத்தை அதிகரிக்கவும், சட்டத்தில் திருத்தம் கொண்டுவரவேண்டும்.

தமிழரசுக்கட்சி தான் கடந்த பல வருடங்களாக தீண்டாமை ஒழிப்பிற்காக பாடுபட்டுவருகிறது. 64-ம் ஆண்டு நடந்த பாதயாத்திரை தீண்டாமை ஒழிப்புக்காகத்தான் நடந்தது. நாங்கள் சென்ற இடமெல்லாம் சிறுபான்மைதமிழர்களுடன் ஒன்ருகஇருந்து சாப்பிட்டோம். தீண்டாமை ஒழிப்பிற்கு தொடர்ந்தும் பாடுபடுவோம்.

## ‘ஈழநாடு’

# பரிசுப் போட்டிகள்

‘ஈழநாடு’ பத்தாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நிர்வாகிகள் ஐந்து பரிசுப் போட்டிகளை நடாத்த முடிவுசெய்துள்ளார்கள். இப்போட்டிகள் கவர்ச்சி மிக்கனவாயும், மாணவ, மாணவிகள், உத்தியோகத்தர்கள், குடும்பப் பெண்கள், தொழிலாளிகள், முதியவர்கள் யாவராலும் பங்கு பற்றக்கூடியனவாயும் அமைந்திருக்கும். ஒவ்வொரு போட்டிக்கும் பணப் பரிசு வழங்கப்படும். ஆயினும் பரிசு பெறுவதைவிட அவற்றில் பங்கு பற்றுவதே ஒரு குதூகலமான அனுபவமாயிருக்கும் என்பது நிச்சயம்.

போட்டிகள் வாராவாரம் போயா தினத்திலும் போயாவுக்குப் பின் 2ம், 4ம், 6ம் நாட்களிலும் வெளிவரும்.

முதலாவது போட்டி வருகிற 21-4-69இல் வெளிவருகிறது.

மூளைக்கு வளர்ச்சியும், மனதுக்கு மகிழ்ச்சியும், கைக்குப் பணத்தையும் தரும் இந்த நவீன போட்டிகளைத் தவறவிடாதீர்கள். விபரங்கள் தொடர்ந்து ‘ஈழநாடு’ இதழ்களில் தரப்படும்.

## ஐ.நா.தலைவர் காலமானார்

குவத்தமாலா, ஏப். 18

ஐ. நா. பொதுச்சபையின் தலைவர் டாக்டர் எமிலியோ அரனேல்ஸ் காட்டலன் இன்று இங்கு காலமானார்.

டாக்டர் அரனேல்ஸ் கடந்த அக்டோபர் மாதம் மூளையில் கட்டியொன்றுக்காக அறுவைச் சிகிச்சைக்குள்ளானதிலிருந்து கடுமையான சுகவீனததுக்குள்ளாகியிருந்தார்.

அவருக்கு வயது 46. கடந்த வியாழனன்று உடல் பரிசோதனைக்கு அனுமதிக்கப்பட்ட அவர் நேற்று காலமானார். குவாத்தமாலாவின் வெளிநாட்டு அமைச்சராகவும் அவர் இருந்துவந்தார்.

## முடிவுகள் வரும்வரை காத்திருப்பீர்

கோட்டை, வெள்ளி,

கடந்த டிசம்பரில் நடைபெற்ற ஜி, சீ. ஈ, உயர்தர பரீட்சை விடைத்தாள்களை மறுபடியும் திருப்பிப் பார்ப்பதற்கு விரும்பும் விஞ்ஞான பரீட்சார்த்திகள் அவர்களின் செய்முறைப் பரீட்சையின் முடிவுகள் வெளியாகும்வரை காத்திருக்க வேண்டும், ஜூன் மாத முற்பகுதியில் இப் பரீட்சை முடிவுகள் வெளியாகும்என பரீட்சை இலாகாவைச்சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.



சிக்காகோவிலிருந்து வந்து யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் இந்துசமயாசார முறைப்படி திருமணம் புரிந்துகொண்ட புதுமணத் தம்பதிகள் இவர்கள்தான், மணமகன் கென்னத் டேவிட் மந்திரங்களை உச்சரிக்க மணமகள் கரோல் புரோகிதர் வழங்கிய தீர்த்தத்தை பக்தி சிரத்தையுடன் பருகுகின்ருர். இந்துமுறைப்படி இத் திருமணத்தை இராமநாதக் குருக்கள் நேற்று முன் தினம் நடத்தி வைத்தார்.

படப்பிடிப்பு: ஏ. வி எம்.

## கேதீச்சர நாதனை மந்திரி பிரேமதாசா தரிசித்தார்

திருக்கேதிச்சரம், வெள்ளி

உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா திருக்கேதீச்சர ஆலயத்துக்குச்சென்று கேதீச்சர நாதனைத்தரிசித்தார் ‘‘ஆலயமும் அதன்சூழலும் மிகப் புனிதமாக இருக்கின்றன. பக்தியை ஏற்படுத்துகிறது’’ என்று திரு. பிரேமதாசா சொன்னார்.

திருக்கேதிச்சரம் கிராம சபையும் மன்னார் எம். பி. திரு. வி. ஏ. அழகக்கோன் மன்னார்ப் பட்டினசபைத் தலைவர் உறுப்பினர்கள் ஆகியோரும் அமைச்சரு க்கு வரவேற்பளித்தனர்.

திருக்கேதீச்சரம் மிகவும் பின்தங்கிய நிலையிலிருப்பதாகவும் திருக்கேதீச்சரத்திற்குக் குடிதண்ணீர், மின்சார வசதிகள் செய்யப்பட வேண்டுமென்றும் மன்னார்ப் பகுதிக்குக் குடிதண்ணீர். மின்சார வசதி சீர் செய்யப்பட வேண்டுமென்றும் மன்னார் எம். பி. யும் திருக்கேதீச்சர கிராமசபைத் தலைவரும் கேட்டுக்கொண்டனர்.

திரு. பிரேமதாசா ஆற்றலும் சுறுசுறுப்புமுள்ள அமைச்சர் என்றும் அவரைப்போன்று மற்றும் அமைச்சர்களும் இருந்தால் நாட்டில் பிரச்னைகளே இருக்காதென்றும் திரு. அழகக்கோன் கூறினார்.

இப்பகுதி மக்களின் குறைகளைத்தாம் அறிந்துள்ளதாகவும் விரைவில் அவற்றை நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## வாலிபர்சங்க 6-வது மகாநாடு

யாழ்ப்பாணம், சனி

யாழ் பிரதேசகம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தின் 6-வது வருடாந்தமகாநாடு அடுத்த மாதம் 1-ம் திகதி சாலை ஆனைப்பந்தி உயர்கலை மன்றலதில் நடைபெறவிருக்கின்றது,

இம் மகாநாட்டில் திருவாளர்கள் பீட்டர் கெனமன் எம் பியும், சரத் முத்தட்டுகமவும் பிரதமபேச்சாளர்களாகக் கலந்து கொள்கின்ருர்கள், (காநி)

அதிகாரியின் அனுமதியின்றி

## கண்டிசென்ற ஆண்தாதிக்கு இப்படி ஒரு தண்டனை

யாழ்ப்பாணம், சனி ளது.

தலைமை அதிகாரியின் அனுமதியின்றியும் லீவு எடுக்காமலும் வெளி இடத்துக்கு பயணம் சென்ருராம் ஆண் மாணவ தாதி ஒருவர். அவர் திரும்பி வரும்போது அவருக்காகக் காத்திருந்தது வைத்திய அதிகாரியின் அதிர்ச்சியூட்டும் கடிதம் ஒன்று

இது நடைபெற்றது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியொன்றில். ஒருநாள் அனுமதியில்லாமல் லீவில் சென்றதற்காக அவரது பயிற்சிக் காலம் மேலும் 3 மாத காலமாகக் கூட்டப்பட்டுள்

தனது அனுமதியின்றி கண்டிக்குச் சென்றதற்காககவே இந்தப் புதுவிதமான தண்டனையை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி டாக்டர் ரி., சண்முகநாதன் குறிப்பிட்ட மாணவனுக்கு விதித்துள்ளார். (கா, நி)



சிக்காகோ நகர மணமகன் செல்வன் கென்னத் டேவிட் மணமகள் செல்வி கரோலின் கழுத்தில் பொறுப்புணர்ச்சியோடு பொற்தாலி கட்டுகிருர், மணமகள் புன்னகை காட்டுகிருர்.

படப்பிடிப்பு: ஏ. வி. எம்.

நடராசாவின் உதவியுட (4-ம் பக்கம் பார்க்க)

வடக்கில் பொலிஸ் வாரத்தில்

## இரண்டு கொலைகளும் இரண்டு விபத்து மரணமும்

யாழ்ப்பாணம், சனி

முதல் நான்கு நாட்களும் அமைதியாக கழிந்த பொலிஸ் வாரம் வடபகுதியில் இரண்டு கொலைகளுடனும், இரண்டு விபத்து மரணங்களுடனும் முடிவடைந்தது.

ஒரு கொலை மன்னாரிலும், மற்றது மீசாலையிலும் நடைபெற்றது. விபத்து மரணங்கள் சாவகச்சேரியிலும் வரணியிலும் நடைபெற்றது.

புதுவருட தினம் மிக அமைதியாக நடைற்றதோடு 10க்கும் மேற்பட்ட பொலிஸ் நிலையங்கள் விளையாட்டுப் போட்டிகளையும் நடத்தி பொதுமக்களுடன் நல்லுறவைப் பலப்படுத்தியுள்ளதாகவும் பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் தமது அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

ஆலயப்பிரவேச நெருக்கடியால் பொலிஸ் வாரத்தில் பல ஆலயங்களுக்கும் காவல் புரியவேண்டிய நெருக்கடியும் பொலிசாருக்கு ஏற்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (கா. நி.)

## தென்னிந்திய திரைப்படங்களை தடைசெய்யக் கோரிக்கை

கல்கிசை, வெள்ளி

‘திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரசாரத்துக்கு ஒரு கருவியெனக் கூறப்படுகின்ற தென்னிந்திய திரைப்படங்கள் தடைசெய்யப்பட வேண்டும் என ராஜாங்க அமைச்சரைக்கேட்பதென்ற ஒரு தீர்மானம் தெஹிவளை-கல்கிசை மாநகரசபை மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் தெஹிவளை-கல்கிசை மாநகரசபையின் முன்னைய தலைவர் திரு. ஜயசிங்க பேசுகையில், சிங்கள மக்கள் தங்கள் மத்தியிலுள்ள அரசியல் வேறுபாடுகளையெல்லாம் உதறித்தள்ளிவிட்டு ஒற்றுமையாக ஒன்றுசேரவேண்டும். இவ்வாறு சிங்கள மக்களிடையே ஒற்றுமை ஏற்படாவிடில் மலைநாட்டுப் பகுதிகளில் தீவிரமாகப் பரவிவரும் தி. மு. க.வை ஒழிக்கவியலாது. தென்னிந்தியத் திரைப் படங்களினல் சிங்கச் சினிமாத் தொழில் பெரிதும் பாதிக்கப்படுகிறது எனக் குறிப்பிட்டார்.

சபை, ராஜாங்க அமைச்சரை தென்னிந்திய திரைப் படங்களைத் தடைசெய்ய வேண்டுமெனக் கோரவேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டுவந்த திரு. அன்ட்றூ பெர்னண்டோ உரைநிகழ்த்துகையில் தென்னிந்திய திரைப்படங்களை தடைசெய்ய அரசாங்கம் ஒருவித நடவடிக்கையும் எடுக்காவிட்டால் நாட்டின் எதிர்காலம் பயங்கரமானதாகவமையும். தி. மு. க. நாட்டில் பரவியுள்ளதோடு எதிர்வரும் தேர்தலுக்குப் போட்டியிட வேட்பாளர்களை நிறுத்தவும் ஆயத்தம் செய்கிறது. இலங்கையில் தி. மு. க.வை ஒழிக்கவும், தென்னிந்திய திரைப்படங்களைத் தடைசெய்யவும் அரசாங்கம் சட்ட பூர்வமான நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கூறினார்.

## ஆலய உற்சவம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

தீவுப்பகுதியில் பிரசித்தி பெற்ற ஆலயங்களுள் ஒன்ருன புங்குடு தீவு கண்ணகி அம்பாள் எனக் கூறப்படும் ஸ்ரீ இராசேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் இம் மாதம் 22-ம் திகதி ஆரம்பிக்கப்பட்டுப் பத்துத் தினங்கள் திருவிழாக்கள் நடைபெறும்.

எதிர்வரும் சித்திரை பூரணைத் தினத்தன்று நடைபெறும் தேர்த்திருவிழாவை யடுத்து தீர்த்த விழா நடைபெறும்.

உற்சவ காலங்களில் அடியார்களுக்கு ‘அன்னதானம்’ கொடுக்கவும் ஏற்பாடாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்


## விற்பனைக்கு

CV 1989 வீ எய்ட் லொறி நல்ல நிலையிலுண்டு. நேரில் பார்வையிடவும். க. ஐயாத்துரை, இணுவில் மேற்கு. 1004

## தேவை

அராலி விக்கினேஸ்வர ப. நோ. கூ. சங்கத்திற்கு முகாமையாளர் தேவை. ரூபா. 2000/- ஆதனமும், ரூபா 1000/- ரொக்கமும் பிணைகட்டக் கூடியவராக S. S. C. யுடன் கூட்டுறவுப் பயிற்சி பெற்றவராயும் இருத்தல்வேண்டும். வேதனம் ரூபா 100/- எல்லா முட்பட சேவையைப் பொறுத்துக் கூட்டப்படும். 25-4-69-க்கு முன் காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும். 941

அனெக்ஸ்:

விவாகமாகாத ஆடவர் ஒருவருக்கு 3 வருடங்கள் குடியிருப்பதற்கு யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் நவீன வசதிகளோடு (கராஜ் உட்பட) கூடிய ஒரு அனெக்ஸ் உடனடியாக குடிவருவதற்கு தேவை. விபரங்களுக்கு: விளம்பர இல. 943 'ஈழநாடு' லிமிட் யாழ்ப்பாணம். 943

## கல்வி

தாவர இயல் வகுப்புகள் 20-4-1969 பி. ப. 4 மணிக்கு ஆரம்பமாகிறது முன் கூட்டியே பதிவு செய்த மாணவர்கள் உடன் சமுகம் கொடுக்கவும். ஆசிரியர் சென்ற வருடம் கற்பித்தவரே. கொலீஜ் ஒவ் எடியூக்கேசன் (College of Education) பழைய பஸ் நிலையம் எதிராக, யாழ்ப்பாணம். 942

## WANTED

Annex:

A bachelor seeks an annex, for immediate occupation with all modern Sonveniences with garage. for a period of 3 years within Jaffna Municipal Limits. Apply Advt. No 944 C/o Eelanadu Ltd, Jaffna. 944

REGAL at JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p m.
Glenn Ford, Arthur Kennedy in
Day of the EVIL GUN
(Adults)

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m.
Poya, Pre-Poya 10-30 A.M.
Audy Murphy in
GUN POINT

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி: 6-30, 9-30க்கு மட்டும்
சிவாஜி — சரோஜாதேவி நடித்த
என் தம்பி

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி — தேவிகா நடித்த
நீலவானம்

ராஜா 96வது தினம்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜீ. ஆர்-ஜெயலலிதா நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்கு அனேக்கட்டணம்

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா நடித்த
ஆயிரத்தில் ஒருவன்

ராணி
[யாழ்ப்பாணம்]
[தினசரி 4 காட்சிகள்]
* ஜெய்சங்கர்
* விஜயகுமாரி நடித்த
ஜீவனாம்சம்

இங்ஸ்லி-மைலன், (கொழும்பு)
பிளாசா (வெள்ளவத்தை)
வெலிங்டன்,
விஜயா


யாழ். மாநகர சபை

## கேள்வி அறிவித்தல்

கீழ்க்காணும் வேலைகள் செய்வதற்கு யாழ். மாநகர சபையில் கட்டிட ஒப்பந்தக்காரராகப் பதிவுசெய்துள்ளவர்களிடமிருந்து 7-5-69 முற்பகல் 10-00 மணிவரை கேள்விகள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. நகரமண்டப எல்லைச் சுவர் இடுகாடு பக்கமாக நீட்டிக்கட்டுதல்.

2. திறந்தவெளி அரங்கு வடக்குப்பக்க மிகுதி எல்லைச் சுவர் கட்டுதல்.

3 யாழ். பொதுசன நூலக மேற்குப்பக்க எல்லைச் சுவர் கட்டுதல்.

கேள்விக்காரர் அனைவரும் கேள்விகள் திறக்கப்படும் 7-5-69 மு. ப. 11-00 மணிக்கு எனது அலுவலகத்தில் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

யாழ். மாநகர சபை மராமத்துப் பொறியியலாளரிடம் 30-4-69 நண்பகல் 12-00 மணிவரை ரூபா 25/- ஒவ்வொரு வேலைக்கும் கேள்வி வைப்புப் பணமாகவும், ரூபா 5/- ஒவ்வொரு வேலைக்கும் படிவப் பெறுமதியாகவும் செலுத்திப் பெறப்படும் படிவத்தில் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விக்காரர் ஒப்பந்தம் செய்துகொண்டதும் கேள்வி வைப்புப் பணம் மாத்திரம் திருப்பிக்கொடுக்கப்படும்.

எல்லாக் கேள்விகளும் அரக்கு முத்திரையிடப்பட்டு இணைப் பிரதிகளுடன் கூடியதாக இருத்தல்வேண்டும். கடித உறையின் இடதுபக்க மூலையில் என்ன வேலைக்கென்று எழுதப்பட்டிருத்தல்வேண்டும்.

மேல் விபரங்களை மராமத்துப் பொறியியலாளரிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. ரி. சுந்தரம்
மாநகர சபை
ஆணையாளர்,

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
17 4-1969. 1526

வடபகுதிக்கு

## இவ்வாரம் 2 கப்பல்கள் வரும்

காங்கேசன்துறை, வெள்ளி

வடபகுதிக்கு இரு கப்பல்கள் வரவிருக்கின்றன.

வடபகுதித் துறைமுகங்களாகிய காங்கேசன்துறைக்கு ஒன்றும் பருத்தித்துறைக்கு ஒன்றுமாக இவை வந்து சேரும்.



அரியாலை சுதேசிய திருநாள் பொன்விழாக் கொண்டாட்டத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட 62 மைல் சைக்கிளோட்டத்தில் முதலிடம்பெற்ற கரவெட்டியைச் சேர்ந்த வி. நவரத்தினம் திருமதி சிற்றம்பலத்திடம் பரிசில் பெறுவதை இங்கு காணலாம். படம்: ஏ. வி. எம்.

த. கா. வாலிபமுன்னணி

## புத்தாண்டு விளையாட்டுப போட்டி முடிவுகள்

உடுப்பிட்டி, வெள்ளி

உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம். பி. யுமான திரு. மு. சிவசிதம்பரம் அன்பளிப்பாக வழங்கியுள்ள வேலுப்பிள்ளை ஞாபகார்த்த வெற்றிக் கேடயம் வதிரிடயமண்ட் விளையாட்டுக் கழகத்தினருக்குக் கிடைத்துள்ளது. கரவெட்டி ஸ்பேஸ் விளையாட்டுக்கழகம் நடாத்திய 2-வது வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இக்கேடயம் வழங்கப்பட்டது.

கரவெட்டி விக்கினேஸ்வராக்கல்லூரி மைதானத்தில் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியும், பரிசளிப்பு விழாவும் நடைபெற்றது. யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. முருகேசம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

வெற்றிக் கேடயத்திற்கான உதைபந்தாட்ட மோதலில் வதிரி டயமன்ட் கோஷ்டியும், வதிரி பொமேர்ஸ் கோஷ்டியும் மோதிக் கொண்டன. இம் மோதலில் வதிரி டயமன்ட்ஸ் கோஷ்டி 6-1 கோல்களால் வெற்றி பெற்றது. திரு. சர்வேஸ்வரன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

காட்சிப்போட்டியில் வவுனியா மாவட்டச் சாம்பியன் கோஷ்டி ஜெட்லைனர்ஸும், உடுப்பிட்டி மாவட்ட சாம்பியன் கோஷ்டி கரவெட்டி ஸ்பேஸ் விளையாட்டுக்கழகமும் உதைபந்தாட்ட மோதலில் ஈடுபட்டன. இம் மோதலில் ஸ்பேஸ் கோஷ்டி 6 2 கோல்களால் வவுனியா கோஷ்டியைத் தோற்கடித்தது. இப்போட்டிக்கு திரு. சிவதயாபரன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

அரியாலை அல்வாய் மென்பந்து கிரிக்கெட்

## அல்வாய் மனோகரா 8 விக்கெட்டால் வென்றது

உடுப்பிட்டி, வெள்ளி இராசநாயகமும், கருணை
அரியாலை ஸ்ரீகலைமகள் நிதியும் முறையே பல வவுண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதைபந்தாட்டம்

## கரவெட்டி ஸ்பேஸ் சுற்றுப்போட்டி முடிவுகள்

உடுப்பிட்டி: வெள்ளி

உடுப்பிட்டித் தொகுதித் தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணியினரால் புத்தாண்டு தினத்தையொட்டி கரவெட்டி விக்கினேஸ்வராக்கல்லூரி விளையாட்டு அரங்கில விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. இவ்விளையாட்டு விழா உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம். பியுமான திரு. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்றது.

போட்டி முடிவுகள்விபரம் வருமாறு:

25 மைல் சைக்கிளோட்டம் (ஆண்கள்) வீ. கந்தசாமி கரவெட்டி மேற்கு, வீ. நவரத்தினம் (கரவெட்டி மேற்கு), பீ. அழகராசா (கரவெட்டி மேற்கு).

25 மைல் சைக்கிளோட்டம் (பெண்கள்) செல்லையா இராஜகுமாரி.

220 யார் ஓட்டம்: ஏ. இரவீந்திரன், சி. ஜெயக்குமார், எஸ். பாலகிருஷ்ணன், 880 யார் ஓட்டம், எம். ஜெயபாலசிங்கம், வீ. கணபதிப்பிள்ளை. ஆர். தெய்வேந்திரன், சமநிலைஓட்டம் பிரேமாவதி நமசிவாயம் கரணவாய் தெற்கு), இதயராணி இளையதம்பி (கரணவாய் தெற்கு), பத்மநிதி சிற்றம்பலம் (கரவெட்டி கிழக்கு).

பொற்கிழி எடுத்தல்: ஏரம்பமூர்த்தி, முட்டி உடைத்தல்: கந்தன் பொன்னுத்துரை (கரவெட்டி கிழக்கு), கயிறு இழுத்தல்: ஜொலி போய்ஸ், சூட்டிங்ஸ்ரார், போர்த்தேங்காய் உடைத்தல்: ஏ தங்கராசா. எஸ். செல்வராசா, சிதம்பரப்பிள்ளை.

சங்கீதக் கதிரை: இதயராணி இளையதம்பி, சி. சந்திரவதனி, வல்லிபுரம் யோகராணி.

கரவை வெல்லன் வெளியரங்கில் நடத்தப்பட்ட மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி முடிவுகள் வருமாறு:

'ஏ' பிரிவு: பொ. சங்கரப்பிள்ளை (மயிலிட்டி). ஆர். அப்பாப்பிள்ளை (சுன்னாகம்) சபாபதி திருச்செல்வம் (மயிலிட்டி).

'பி' பிரிவு: எஸ். சோமசுந்தரம் (உடுப்பிட்டி). எஸ். இளையதம்பி (கரவெட்டி) ரீ. சிவசுப்பிரமணியம் (உரும்பராய்).

## பொமேஸ் வெற்றி

பருத்தித்துறை, புதன்

நெல்லியடி ஸ்பேஸ் விளையாட்டுக்கழக ஆதரவில் நடந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வதிரி பொமேஸ் கோஷ்டியும் வல்வை ஒற்றுமைக் கோஷ்டியும் மோதியதில் பொமேஸ் 8--1 கோல்களால் வெற்றியீட்டியது. திரு. கே. இரத்தினசிங்கம் நடுவராகக் கடமையாற்றினர்.

வதிரி டயமண்ட் கோஷ்டியும் வல்வை றண்ணிங் கோசெஸ் கோஷ்டியும் மோதியதில் டயமண்ட் 7-3 கோல்களால் வெற்றியீட்டியது. திரு. சி. சர்வேஸ்வரன் நடுவராகக் கடமையாற்றினர்.

......

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுதாபனம்

சனி 19—4—69

செய்திகள் காலை 7-00, பகல் 12-45. மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-10 கிராமச் செய்திகள் 7-30 திரை இசை, 8-00 செய்திச் சுருக்கம், 8-03 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ. அன் 49 மீ.

12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன் 61 மீ.

4-30 பாடசாலைகளுக்கான நிகழ்ச்சி, 5-00 செய்திச் சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம் 5-45 படப்பாட்டுக்கள்.

6-15 வீணையும் புல்லாங்குழலும், 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 பாட்டு, 7-35 வாத்திய இசை, 7-45 தொடர் நாடகம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 விவாத மேடை, 10-00 நேயர் விருப்பம், 10-30 செய்திச் சுருக்கம்.

## உடுப்பிட்டி வென்றது

பருத்தித்துறை, வெள்ளி

வவுனியா ஜற்லைனேஸ் கோஷ்டிக்கும் உடுப்பிட்டிக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் உடுப்பிட்டி 6 2 கோல்களால் வெற்றியீட்டியது வவுனியா கோஷ்டியில் தங்கராசா, அருள் ஆகியோரும் உடுப்பிட்டிக் கோஷ்டியில் முனைப், இரத்தினசிங்கம், பாலா, கணேசமூர்த்தி ஆகியோரும் திறமையாக விளையாடினர். திரு. எஸ். சிவதயாபரன் நடுவராகக் கடமையாற்றினர்.

......

## கடை அடைப்பு

அராலி, வெள்ளி

அராலி விக்னேஸ்வர ப. நோ. கூ. சங்க பண்டகசாலையை இன்று அச்சங்க முகாமையாளர் திறந்து வியாபாரஞ் செய்ய வியலாதென கடிதமூலம் சங்கத் தலைவருக்கு அறிவித்தல் கொடுத்துள்ளார் சங்க முகாமையாளரின் சேவை அடுத்த மாதத்திலிருந்து தேவைப்படாதென சங்க நிர்வாகம் சிலநாட்களுக்கு முன்னர் தீர்மானித்து முகாமையாளருக்கு அறிவித்தல் கொடுத்தமையே இதற்குக் காரணமெனக் கூறப்படுகிறது. எனினும் பண்டகசாலையை அங்கத்தவர் மற்றும் வாடிக்கையாளர்களுக்குச் சிரம மேற்படாது திறந்து வைக்க சங்க நிர்வாகிகள் முயற்சிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

......

## மின் இயக்க ஊழியர்

கோப்பாய், வெள்ளி

கோப்பாய் கிராமசபையில் மின்இயக்கஊழியராகக் கடமையாற்றுவோர் கோப்பாய் கி. ச. பகுதியிலேயே தங்கியிருக்கக்கூடிய வசதிகளை ஏற்படுத்தவேண்டுமென்று உள்ளூராட்சி அமைச்சைக் கோரும் மகஜரொன்று கோப்பாய் வாக்காளர்களால் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இந்த ஏற்பாட்டினால் கிராமத்தில் மின்சாரத்தினால் ஏற்படும் அசாதாரண விபத்துக்களை உடனுக்குடன் தீர்த்துக்கொள்ள முடியுமென பொதுமக்கள்

'பி' பிரிவு: எஸ். சோமசுந்தரம் (உடுப்பிட்டி), எஸ். இளையதம்பி (கரவெட்டி), ரீ. சிவசுப்பிரமணியம்

...தொடர் நாடகம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 விவாத ...சுருக்கம்.

...ல் ஏற்படும் அசாதாரண விபத்துக்களை உடனுக்குடன் தீர்த்துக்கொள்ள ...


இங்ஸ்லி-மைலன், (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை)

வெலிங்டன், (யாழ். நகர்) விஜயா (மட்டுநகர்)

ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை

மற்றும் சினிமாஸ் திரைகளில்




கலைப்பேரரசர் எம். ஜி. ஆர்

ஆடலழகி ஜெயலலிதா

எம். ஆர். ராதா, நாகேஷ், மனோரமா

மற்றும் பலர் நடித்த

சரவணா பிலிம்ஸ்

சந்திரோதயம்

டைரக்ஷன்: கே. சங்கர்

4-வது வாரம்!

கெப்பிட்டல் (கொழும்பு)

முத்துராமன், ராஜன், பாரதி, பானுமதி

நடித்த

பூவும் பொட்டும்


வடபகுதிக்கு இரு கப்பல்கள் வரவிருக்கின்றன.

வடபகுதித் துறைமுகங்களாகிய காங்கேசன் துறைக்கு ஒன்றும் பருத்தித் துறைக்கு ஒன்றுமாக இவை வந்து சேரும்.

காங்கேசன் துறைக்கு மாவுக்கப்பலும், பருத்தித் துறைக்கு அரிசிக்கப்பலும் வரும். இன்னும் இரண்டு மூன்று தினங்களுக்குள் இவை வரவிருக்கின்றன.

## பழைய மாணவர் சங்கம்

யாழ்ப்பாணம், சனி

நல்லூர் அரசினர் ஆசிரிய கலாசாலைப் பழைய மாணவர் சங்கம் திரு. நாகேந்திநாதன் தலைமையில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தின்போது அங்குரார்ப்பணம் செய்யப் பெற்றது.

தலைவர்- அதிபர் திரு. ஜே. ஜி. அரசரத்தினம். உபதலைவர்கள்- திரு. அ. செல்லத்துரை, திரு. எஸ். கந்தசாமி, திரு. நா. சோதிநாதன்,

செயலாளர்- திரு. வ. கந்தசாமி. உபசெயலாளர்- திரு வீ. சிவகுரு. பொருளாளர்- திரு. செ. நமசிவாயம். 8பேர் கொண்ட நிர்வாகசபையொன்றும் அமைக்கப்பட்டது.

பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கலாசாலை அபிவிருத்திகளுக்கு உழைத்தல், ஓய்வு பெறவிருக்கும் கலாசாலை அதிபருக்குச் சேவைநலம் பாராட்டு அளித்தல், பழைய மாணவர் தினம் கொண்டாடுதல் முதலியவற்றைச் சங்கம் மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## அல்வாய் மனோகரா 8 விக்கெட்டால் வெற்றி

உடுப்பிட்டி, வெள்ளி

அரியாலை ஸ்ரீகலைமகள் விளையாட்டுக் கழகத்தினருக்கும், அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்தினருக்குமிடையே வருடந்தோறும் நடைபெறும் மென்பந்து கிரிக்கெட்போட்டியில் இம்முறை அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் அரியாலை ஸ்ரீகலைமகள் விளையாட்டுக் கழகத்தை 8 விக்கெட்டுகளால் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலைகோஷ்டியினர் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றனர் இதில் மேற்படி கோஷ்டியின் காப்டன் ஐ. வரதராசா 36 ஓட்டங்களைப் பெற்றார். அடுத்து ஆடிய மனோகரா கோஷ்டியினர் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றார். இதில் இராசநாயகம், மங்களேஸ்வரன், கருணாநிதி ஆகியோர் முறையே 53, 28, 26 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தில் அரியாலைக் கோஷ்டியினரை மனோகரா கழகத்தின் பந்து வீச்சு வீரர்களான கருணாநிதியும், மகேந்திரராசாவும் அடுத்தடுத்து வீழ்த்தினர். அரியாலையினர் சகல விக்கெட்டுகளையுமிழந்து மொத்தமாக 82 ஓட்டங்களைப் பெற்றனர். ஆட்டம் முடிவடைவதற்கு 43 நிமிடங்களில் மனோகரா கோஷ்டியினர் 67 ஓட்டங்கள் பெற வேண்டியிருந்தது. இதில் இராசநாயகமும், கருணாநிதியும் முறையே பல பவுண்டரிகளை அடித்து, எண்ணிக்கையை 46ஆக ஆக்கிக் கொண்டனர். இவர்கள் 46 ஓட்டங்களையும் 32 நிமிடங்களில் அடித்தனர்.

மனோகரா கோஷ்டியினர் 3 விக்கெட்டுக்களை இழந்து 68 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கெட்டால் வெற்றிபெற்றனர். இப்போட்டிக்கு திருவாளர்கள் கே. சிங்கராஜா, கே. ஜெயராஜா ஆகியோர் மத்தியஸ்தர்களாக கடமையாற்றினர்கள்.

......

## சிவஞானத் தமிழ்விழா இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், சனி

புங்குடுதீவு கிழக்குகலட்டி, ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக, சிவஞானத்தமிழ் விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள்:

காலை 8 மணி: விசேஷ அபிஷேக ஆராதனைகள்.

மாலை 5 மணியிலிருந்து சிவநெறிச்செம்மல் திரு. சி. சரவணமுத்து தலைமையில் சொற்பொழிவுகள் நடைபெறும்.

திரு. க. சிவராமலிங்கம் 'அப்பர் அருள் விருந்து' பற்றியும், திரு. எஸ். சொக்கலிங்கம் 'விஞ்ஞானமும் மெய்ஞானமும்' பற்றியும், செல்வி புஷ்பா செல்வநாயகம் 'ஔவையாரும் பிள்ளையாரும்' பற்றியும் உரை நிகழ்த்துவார்கள்.

கலைநிகழ்ச்சியில் பொன். சுந்தரலிங்கத்தின் இன்னிசைக் கச்சேரியும், ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாததம்பிரான் சுவாமிகளின் 'தும்பியும் நம்பியும்' பற்றிய கதாப்பிரசங்கமும் நடைபெறும்.

0 0 0

## இசைவிழா

வண்ணை அரசடி விநாயகர் ஆலய முன்றலில் நடைபெறும் யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபாவின் 18-வது ஆண்டு இசைவிழாவின் இன்றைய நிகழ்ச்சிகள் விபரம்;

மாலை 5 மணி: வி. கே. கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி சகோதரர்களின் நாதஸ்வரம்

மாலை 6-30 மணி: செல்வி சந்திரமதி சதாசிவத்தின் இன்னிசை.

இரவு 8 மணி: கலையரசு கே. சொர்ணலிங்கத்தின் தலைமையுரை.

8-15 மணி: செல்வி நவராஜகுலம் வாளரசனின் இன்னிசை.

9-45மணி: திருமதி பூமணி இராசரத்தினத்தின் இன்


வின்ஸர் 22-4-69 செவ்வாய்க்கிழமை முதல்

சிவாஜி கணேசன், ஜெயலலிதா ஜோதிலட்சுமி

நாகேஷ், தங்கவேல், சோ நடித்தது

இந்தியாவில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய

கலாட்டா கல்யாணம்

இது போன்ற முதல்தர படங்கள் திரையிடுகையில் தூர இடங்களிலிருந்து வருபவர்கள் இடமின்றித் திரும்பாதிருக்க முன் கூட்டியே பல்கனி, றிசேர்வ் ஆசனங்கள் பதிவு செய்துகொள்ளலாம்.

கையிருப்பிலே!

டேவிட் பிரவுண்

770-36 BHP
ரூ. 18750/=
(வெளிநாட்டுச் செலவாணி உறுதிப்பத்திரத்துடன்)

880-46 BHP
ரூ. 20500/=
(வெளிநாட்டுச் செலவாணி உறுதிப்பத்திரத்துடன்)




அத்துடன் உறுதியுடன் உருவாக்கப்பட்ட



3 முதல் 3½ தொன் நிறை கொள்ளும் உயர்த்தக்கூடிய இழுவை வண்டி

தொடர்பு கொள்ளுங்கள்.

ரோலன்ஸ் (ட்ராக்டர்கள்) லிமிட்டெட்

ரோலன்ஸ் லிமிட்டெட் (துணைக்கம்பெனி) டார்ட்ரேட் கொழும்பு 7.

HOUSE OF R ROWLANDS


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

செக்கோஸ்லவாக்கிய தலைமைப் பீடத்தில் மாற்றம்

# டுப் செக் பதவி துறந்தார்; அவர் இடத்தில் ஹுசாக் நியமனம்

## சோவியத் எதிர்ப்பு ஆர்ப்பாட்ட எதிரொலி

பிராக், ஏப். 18

**செக்கோஸ்லவேக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் முதல்காரியதரிசி பதவியிலிருந்து திரு. அலெக்சாண்டர் டுப்செக் விலகிக்கொண்டுள்ளார்.**

**திரு. டுப்செக்கின் இடத்துக்கு ஸ்லோவாக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு குஸ்டாக் ஹுசாக் நியமிக்கப்பட்டுள்ளார்.**

செக்கோஸ்லவாக்கியாவின் அரசியல் தாராளக் கொள்கைகளுக்கு திரு டுப்செக்கே பிரதான மூலகர்த்தாவாகக் கருதப்பட்டுவந்துள்ளார். அவருக்குப் பதிலாக இப்பொழுது செக்கோஸ்லவாக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் காரியதரிசி பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ள திரு ஹுசாக், அண்மையில் வார்ஸோ ஒப்பந்தநாட்டுப் படைகள் ஆக்கிரமிப்பு மேற்கொண்டபின்னர் சோவியத் யூனியனுடன் சமரச உடன்பாடு செய்துகொள்ள வேண்டும் என்ற கொள்கையை வற்புறுத்திவந்துள்ளார்.

நேற்று நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கூட்டத்தில் திரு டுப்செக் திரு ஹுசாக்கின் பெயரை பிரேரித்தார். திரு டுப்செக் பதவியிலிருந்துவிலகியபோதும் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய பேரவையின் ஒரு அங்கத்தவராகவே இருந்துவருவார் செக்கோஸ்லவாக்கியாவின் தாராளக் கொள்கைகளுக்கு காரணமாகவிருந்த இன்னுமொரு தலைவரான சிம்ரோஸ்கி என்பவரும் மத்தியக்கமிட்டியிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறார்.

இத்தகவல்களை செக்கோஸ்லவாக்கிய அதிபர் திரு ஸ்வபோடா இன்று அறிவித்தார்.

அண்மையில் நாட்டில் இடம்பெற்ற சோவியத்எதிர்ப்புஆர்ப்பாட்டங்கள் நாட்டின் நலன்களையும் சோவியத் யூனியனுடனான உறவுகளையும் பெரிதும் பாதித்துள்ளதாக திருஸ்வபோடா கூறினார்.

அதிபர் ஸ்வபோடா பேசியவுடன் திரு ஹுசாக் நாட்டு மக்களுக்கு விடுத்த ஒரு செய்தியில், தாராளக் கொள்கையைத்தாம் தொடர்ந்து கடைப்பிடிக்கப்போவதாகவும் ஆனால் நடைமுறைகளில்தான் சற்று மாற்றங்கள் இருக்குமென்றும் அவர் குறிப்பிட்டார். சமூக ஒழுக்கத்தைத் தாம் நிலைநிறுத்தப்போவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# இஸ்ரேல் ரொக்கட் நிலைகளை அரபுப்படைகள் நிர்மூலமாக்கின

## நேற்று மீண்டும் 90 நிமிடம் சண்டை

கெய்ரோ, ஏப். 18

இஸ்ரேலியரின் முக்கிய ராணுவநிலைகளையும் ரொக்கட் ஏவுநிலைகளையும் ஐக்கிய அரபுப் படையினர் நேற்று நிர்மூலமாக்கி விட்டதாக அறிவித்துள்ளனர்.

இஸ்ரேலியரின் முக்கிய ராணுவ நிலைகள் தகர்க்கப்பட்டதோடு பலத்த ஆள் சேதமும் ஏற்படுத்தப்பட்டதாக அவர்கள் கூறினார்கள். ஐ. நா. மேற்பார்வையாளர்கள் அமைதிக்கு ஏற்...

நான்கு வல்லரசுகளின் ஆதரவு இல்லாமல் பயனற்ற முயற்சியில் டாக்டர் ... எடுப்பதில் பயனில்லையென்று யுதாண்ட் எச்சரித்துள்ளார்.

வேவுவிமான விவகாரம்

## வட கொரிய — அமெரிக்க அதிகாரிகள் சந்திக்கின்றனர்

வாஷிங்டன், ஏப். 18

வட கொரியாவால் சுட்டு வீழ்த்தப்பட்ட அமெரிக்க உளவு விமானம் சம்பந்தமாக, வட கொரிய அதிகாரிகளும், அமெரிக்க அதிகாரிகளும் இன்று பான்முன்ஜானில் கூடி ஆலோசிக்கவிருக்கிறார்கள்.

அமெரிக்காவின் இந்த உளவுவிமானம் வட கொரிய பிராந்தியத்துக்குள் அத்துமீறிப் பிரவேசித்ததாக வட கொரியர் கூறியுள்ளனர்.

இதற்கிடையில் இரண்டு சடலங்களை ஜப்பானியக் கடலில் அமெரிக்கக் கப்பல்கள் கண்டெடுத்துள்ளன. மேலும் தேடுதலில் இருயுத்தக் கப்பல்கள் ஈடுபட்டுள்ளன.

இன்று மாலை அதிபர் நிக்ஸன் நடத்தவிருக்கும் பத்திரிகைநிருபர்கள் மகாநாட்டில் இதுவிஷயமாக அமெரிக்கா எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் பற்றி அறிவிப்பாரென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அச்சுவேலியில் நடந்தது:

## வாலிப மனநோயாளரின் சர்க்கஸ் சேஷ்டைகள்

யாழ்ப்பாணம், சனி

நவீன சர்க்கஸ் விளையாட்டுக்களை வீடு வீடாகச் சென்று செய்து காட்டிய மனநோயாள வாலிபன் ஒருவனைப் பார்த்து பயம்கொண்ட மக்கள் வீடுகளை விட்டே ஓடத் தொடங்கினார்களாம். தக்க சமயத்தில் ஸ்தலத்துக்குச் சென்ற பொலிஸார் அந்த வாலிபனைக் கைது செய்தார்கள்.

சுமார் 3 மணிநேரம் சகல மக்களையும் ஒரு கலக்குக் கலக்கிய இச் சம்பவம் அச்சுவேலிப் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கைது செய்யப்பட்ட வாலிபன் சுமார் 3 வருடங்கள் அச்சுவேலி சிறுவர் நன்னடைத்தைப் பாடசாலையிலிருந்து வந்ததாகவும் பொலிஸ்விசாரணையில் தெரியவந்தது.

நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபின்னர்வைத்திய பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட இவ்வாலிபன் தற்போது யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

(கா. நி.)

## ‘உடல்பலத்தையும் உபயோகிக்க வேண்டும்’

பருத்தித்துறை, வெள்ளி

“தமிழன் மூளையை மட்டும் உபயோகித்து முன்னேறியது ஒருகாலம். ஆனால் இனிமேல் மூளையையும், உடல்பலத்தையும் உபயோகிக்கவேண்டியநிலைமை உருவாகியுள்ளது. நாட்டின் மிக முக்கிய பிரச்னையாகிய உணவுப் பிரச்சினையைத்தீர்க்க சரீரபலம் அவசியம்” என உபசபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நெல்லியடி ஸ்பேஸ் கழக உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதித்தின வெற்றி வீரர் தெரிவுத் தினத்தன்று கூறினார்.

பருத்தித்துறை இலங்கை வங்கி மனேஜர் திரு. வி. எஸ். கந்தப்பு தலைமையில் நடந்த இவ்விழாவில் யாழ். உதவிஅரசாங்கஅதிபர் திரு. த. முருகேசம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். திருமதி முருகேசம்பிள்ளை, வெற்றி வீரருக்கான வெற்றிக் கேடயத்தை டயமன்ட் கோஷ்டித் தலைவருக்கு அளித்தார்.

மேலும் தற்போதுள்ள விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தை விஸ்தரிக்க உதவுவதாக திரு. முருகேசம்பிள்ளை வாக்களித்தார்.

## பொலிஸ் நாய்களால் துப்புத்துலக்க முடியவில்லை

யாழ்ப்பாணம், சனி

களவைத் துப்புத்துலக்க ... பொலிஸாரால் ... கள் ... எடுத்துக் கொள்ளப்பட்ட ... முயற்சியும் ... னால் எதுவும் துப்புத்துலக்க முடியாமல் அவை திருப்பி அனுப்பப்பட்டன.

... உடைக்கப்பட்ட கடையை பொலிஸார் காவல்புரிந்து வருகின்றனர். புலன் விசா...

## விழாக்கள் கொண்டாடுவதால் உரிமைகளைப் பெறமுடியாது

### ஊர்காவற்றுறை எம். பி. கருத்து

அல்லைப்பிட்டி, வெள்ளி

தமிழ்க்கட்சிகள் விழாக்கள் கொண்டாடுவதாலோ, ஆடம்பரமான செலவுகள் செய்து மகாநாடு நடத்துவதாலோ, தமிழினத்தின் உரிமைகளை பெற்றுவிடவோ விட்டுக்கொடுத்த உரிமைகளை திரும்பப் பெறவோ முடியாது.

இவ்வாறு ஊரெழு பிள்ளையார் கோவில் வீதியில் நடைபெற்ற அரசியல் ஆலோசனைக் கூட்டமொன்றில் உரைநிகழ்த்திய ஊர்காவற்றுறை எம். பி. திரு. வ. நவரத்தினம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக தென்னிலங்கை அரசியல்வாதிகளால் தமிழினம் ஏமாற்றப்பட்டுவந்துள்ளது. போராடுவோம்என்று வீருப்புப் பேசியவர்கள் இன்று இனத்தைக் காட்டிக்கொடுத்துவிட்டனர். இவர்களால் இனிமேல் தமிழினத்திற்கு விடுதலைபெற வழிவகுக்க முடியாது. தீவிரமான ஒரு புதிய இயக்கமும், புதிய முறையிலான இடைவிடாப் போராட்டமுமே இனிமேல் தென்இலங்கை அரசியல்வாதிகளை சிந்திக்கவைக்க முடியும். இதன் மூலமே நாம் எமது இன விடுதலைக்கு வழிகாணமுடியும் எனக் குறிப்பிட்டார், இக்கூட்டத்தில் திரு. எம். எஸ். கனகசுந்தரம் உட்பட மற்றும் சிலர் பேசினர்.

## ஜோன் அட்டிகலை கொழும்பு செல்லலாம்

யாழ்ப்பாணம், சனி

“ஜோன் அட்டிகலை” எந்த நேரமும், மீண்டும் கொழும்புக்குக் கொண்டு செல்லப்படலாம். இதற்கான சில நடவடிக்கைகளை பொலிஸ் இலாகா மேற்கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

வட பகுதியில் பொலிஸாரின் அதி வேக இயந்திரப் படகான “ஜோண் அட்டிகலை” க்கே இந்தக் கதி நேரவிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் கடமையாற்றி தற்போது இடமாற்றம் செய்யப்பட்டிருக்கும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் “ஜோன் அட்டிகலை” யை எடுத்துச் சென்று விபத்துக்குள்ளானதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் படவிருப்பதாக அறியப்படுகின்றது.

இதுபற்றி காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் கடந்த வாரம் கொழும்பிலிருந்து வந்த பொலிஸார் பகிரங்க விசாரணை ஒன்று நடாத்தியதும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும். (கா. நி)

## சீரணி நாகபூஷணி மஹோற்சவம்

யாழ்ப்பாணம், சனி

சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்மன் ஆலய மகோற்சவம், கோவில் புனருத்தாரணம் காரணமாக இம்முறை நடைபெறுதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமைச்சரை வரவேற்க ஏற்பாடு

முல்லைத்தீவு, வெள்ளி

இம்மாதம் 23-ம் திகதி முல்லைத்தீவுக்கு விஜயஞ் செய்யவிருக்கும் உள்ளூராட்சிஅமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவுக்கு பிரமாண்டமானதொரு வரவேற்பளிக்க முல்லைத்தீவு பட்டினசபைத் தலைவர் திரு. ம. கு. வஸ்தியாம்பிள்ளை ஏற்பாடுகள்செய்து வருகிறார். இங்குவரும் அமைச்சருக்கு இராப்போசன விருந்தை முல்லைத்தீவு பட்டினசபை அளிக்கும்.

புகையிலையும் காய்கறியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெய்ரோ, ஏப். 18

இஸ்ரேலியரின் முக்கிய ராணுவநிலைகளையும் ரொக் அரபுப் படையினர் நேற்று நிர்மூலமாக்கி விட்டதாக அறிவித்துள்ளனர்.

நேற்றுமாலை சூயஸ் கால்வாயின் குறுக்கே இஸ்ரேலியர் பீரங்கி தாக்குதல் ஒன்றை ஆரம்பித்ததாகவும், அரபுப்படைகள் திருப்பிச்சுட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. இந்தச் சண்டை சுமார் 90 நிமிடங்கள் தொடர்ந்தது. இதில் இஸ்ரேலியரின் முக்கிய ராணுவ நிலைகள் தகர்க்கப்பட்டதோடு பலத்த ஆள் தாக அவர்கள் கூறினார்கள். ஐ. நா. மேற்பார்வையாளர்கள் அமைதிக்கு ஏற்பாடுசெய்தார்கள்,

### யுதாண்ட் எச்சரிக்கை

மேற்காசியாவில் அமைதி ஏற்படுத்தும் முயற்சியில் ஐ நா. அதிகாரி டாக்டர் ஜாரிங் தொடர்ந்து ஈடுபடுவது பற்றி ஐ நா. பொதுக்காரியதரிசி கருத்து வெளியிட்டிருக்கிருர். நான்கு வல்லரசுகளின் ஆதரவு இல்லாமல் பயனற்ற முயற்சியில் டாக்டர் [illegible] யுதாண்ட் எச்சரித்துள்ளார்.

### நான்கு வல்லரசு கூட்டம்

மேற்காசிய அமைதி சம்பந்தமாக நேற்று மீண்டும் நான்கு வல்லரசுகளின் ஐ. நா. பிரதிநிதிகள் நியுயோர்க்கில் கூடிப் பேசினார்கள். பேச்சுக்களின் விபரம் எதுவும் வெளிவரவில்லை.

# தமிழ்நாடு அரசு கோரும் அதிக அதிகாரங்கள்
## கருணாநிதி விளக்கம்

சென்னை, ஏப். 18

மாநிலங்களுக்கு எந்தவிதமான அதிகாரங்கள் தேவையென்பது பற்றி தமிழ்நாடு முதல் அமைச்சர் திரு. மு. கருணாநிதி ஒரு கூட்டத்தில் விளக்கினார். சட்ட நிபுணர்கள் கல்வி நிபுணர்கள் குழுவொன்றை நியமித்து அந்தக்குழு ஆராய்ந்து அறிவிக்கும் தேவையான அதிகாரங்களையே கோருவோம் என்று முதல்வர் கூறினார்.

சென்னை சேப்பாக்கம் நடேசன் நகரில் முதல் அமைச்சர் கருணாநிதிக்கு பாராட்டு விழா நடைபெற்றது. அங்கு திரு. கருணாநிதி பேசியதாவது.

"அண்ணா மறைந்தபிறகு என்மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புக்களை ஏற்றுசட்டமன்ற நடவடிக்கைகள் ஒருபுறமும், சுற்றுப் பயணங்கள் ஒருபுறமும், என் தொகுதி மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணம் ஒருபுறமும், தமிழ் நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் ஏற்பட்டுள்ள வறட்சி நிலையை சமாளிக்க வேண்டியது ஒரு புறமுமாக இப்படி பலவிதத்தில் நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் நேரத்தில் நீங்கள் காட்டும் ஆர்வம் ஆரவாரமும் எனக்கு உற்சாகத்தை ஊட்டுகிறது.

வீரமணி பேசும்போது 20 ஆண்டு காலமாக ஆண்டு கொண்டிருக்கும் காங்கிரஸ் ஆட்சியை தோசையை புரட்டுவது போல் புரட்டி போடுங்கள் என்று ஒரு கூட்டத்தில் அண்ணா குறிப்பிட்டதையும் அதுபோலவே தோசையை புரட்டிபோட்டு தி. மு. க. வை ஆட்சியில் அமர்த்தி விட்டார்கள் என்று கூறினார்.

அதுபோல இந்த அரசையும் தோசையை புரட்டியது போல் மக்கள் புரட்டமாட்டார்களா என்று கேட்கலாம்.

இந்தஆட்சிதோசையல்ல. ஆப்பம், தோசையை திருபிப் போடுவது போல் அப்பத்தை திருப்பிப் போடுவதில்லை. சமையல் தெரிந்தவர்களுக்கு இது நன்ருகத் தெரியும்.

வி. வி. கிரி, நம்பூதிரிபாடு ஆகியோர் என் வீட்டில் வந்து என்னை பாராட்டியும், வாழ்த்தியும் பேசினார்கள்.

தி. மு க. ஆட்சியை வெகுவாக பாராட்டினார்கள்.

தி. மு. க. ஆட்சிக்கு அவர்கள் வழங்கும் பாராட்டுரைகளும், வாழ்த்துரைகளும் சிலருக்கு அருவருப்பையும் ஆத்திரத்தையும் கொடுத்திருக்கிறது.

பின் தங்கியவர்களுக்காக தனி இலாகாவை அமைத்து இருப்பதற்கு காங்கிரஸ் உறுபினர்கள் என் வீட்டில் வந்து பாராட்டி விட்டுச் சென்ருர்கள்.

அவர்கள் காங்கிரஸ் ஆட்சியில் சட்டமன்றத்தில் கதறிக்கதறி பார்த்தோம். நடக்கவில்லை. காங்கிரஸ் அல்லாத இந்த ஆட்சியில் நடந்திருக்கிறது என்பதால் பாராட்டி விட்டு போகத்தான் வந்தோம். வேறு சலுகை எதுவும் நாடிவரவில்லை என்று கூறினார்கள்.

ஆகவே காங்கிரஸ் ஆட்சியை காங்கிரஸ்காரர்களின் உதடுகள் வாழ்த்தி இருக்கும். ஆனால் அவர்களின் உள்ளங்கள் எப்போதும் புழுங்கிக் கொண்டிருக்கின்றன.

மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் உள்ள உறவு பற்றி பலவாறு விமர்சிக்கப் படுகிறது.

இந்த விஷயத்தை பொறுத்தவரை நமது கொள்கை உறுதியானது. இறுதியானது. "உறவுக்குக் கை கொடுப்போம்" உரிமைக்கு குரல் கொடுப்போம்.

மாநிலங்களுக்கு எந்த எந்த அதிகாரங்களை பிரித்துத் தரவேண்டும் என்று கேட்கிறீர்கள் என்றுடெல்லி நிருபர்கள் கேட்டபோது அவர்களிடம் சட்ட நிபுணர்கள், கல்வி நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்று அமைத்து அந்த குழு அறிவிக்கும் தேவையான அதிகாரங்களுக்குத்தான் வாதாடுவோம் என்று கூறி இருக்கிறேன்.

தமிழ்நாட்டில் தொடங்கும் தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கும் அதிகாரம் டெல்லிக்குத் தேவைதானா? மேம்பாலம் கட்ட அனுமதியளிக்கும் அதிகாரம் அவர்களுக்குத் தேவைதானா?

வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டுவர டெல்லியை கேட்கவேண்டியிருக்கிறது. அனுமதி கிடைக்க ஓராண்டாகிறது. இந்த அதி ாரம் தேவைதானா?

பெரிய அதிகாரங்களை வேண்டுமானால் வைத்துவிட்டுப்போகட்டும். வேண்டாம் என்று சொல்லவில்லை. சிறிய அதிகாரங்களையாவது பிரித்துக் கொடுக்கட்டும்.

எல்லா மாநிலங்களும் சேர வேண்டும். பின் போராடவேண்டும் என்று வங்க முதலமைச்சர் கூறியிருக்கிருரே என்று நிருபர்கள் என்னிடம் கேட்டபோது முதலில் சொன்னதை ஏற்றுக்கொண்டு, இரண்டாவது சொன்னதைப் பரிசீலிப்போம் என்றுதான் கூறியிருக்கிறேன்.

### வளர்ந்துள்ளது

தி. மு. கழகம், அண்ணா மறைவுக்குப் பின் மக்களிடையே செல்வாக்கை இழந்து வருகிறது என்று சி. சுப்பிரமணியம் கூறியிருக்கின்ருர்.

அண்ணா மறைவுக்குப் பின்பும் தி. மு. க. வளர்ந்துள்ளதே தவிரத் தேயவில்லை. அண்ணா மறைவுக்குப் பின்தான் பாண்டிச்சேரி தேர்தலில்வெற்றிபெற்று பரூக்கை முதலமைச்சர் ஆக்கியிருக்கிருேம். இது வளர்ச்சிக்கு அறிகுறியா? தேய்வுக்கு அறிகுறியா?

## துப்புத்துலக்க முடியவில்லை

யாழ்ப்பாணம், சனி

களவைத் துப்புத்துலக்க [illegible] எடுத்துக் காள்ள பட்ட கடைசி முயற்சியும் தோல்வியிலேயே முடிவடைந்ததாம்.

யாழ்ப்பாணம் பஜாரிலுள்ள ஜவுளிக்கடையொன்றில் புதுவருட தினத்தன்று இரவு நடைபெற்றதாகப் புகார் செய்யப்பட்ட பணக் களவைத் துப்பறியவே பொலிஸ் நாய்கள் இங்குவரவழைக்கப்பட்டன.

கடையின் ஓட்டில் கிடந்த கைவிரல் அடையாளங்கள் பதிவு செய்யப்பட்டதோடு, சில தடயங்களையும் பொலிஸார் கண்டுபிடித்தனர். எனினும் பொலிஸ் நாய்களால் எதுவும் துப்புத்துலக்க முடியாமல் அவை திருப்பி அனுப்பப்பட்டன. கடையை பொலிஸார் காவல்புரிந்து வருகின்றனர். புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது. (கா. நி.)

## பூநகரி மக்கள் கஷ்டம்

யாழ்ப்பாணம், சனி

பூநகரி மக்கள் தொடர்ந்து தமது பாதைப் போக்குவரத்துப் பற்றிப் புகார் தெரிவித்துவந்தும் இதுவரை பாதைகளைச் செப்பனிட எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாததால் இங்குள்ள மக்கள் பாக்குவரத்தின்போது மிகுந்த சிரமத்துக்குள்ளாக வேண்டியிருக்கிறது (ந. நி.)

## சிர்ஹான் குற்றவாளி

வாஷிங்டன், ஏப். 18

அமெரிக்க அதிபர் காலஞ்சென்ற ஜோன் எப். கென்னடியின் சகோதரர் செனட்டர் ரொபர்ட் எப் கென்னடியைச் சுட்டுக்கொன்றதாக சிர்ஹான் என்ற பாலஸ்தீனவாலிபன் மீதான வழக்கில் அவன் குற்றவாளியென ஜூரிசபையினர் தீர்ப்புக்கூறியிருக்கின்றனர். தண்டனை பற்றிய தீர்ப்பு பின்னர் தெரிவிக்கப்படும்.

## தமிழிசைச் சங்கம்

அல்லைப்பிட்டி, வெள்ளி

மண்டைதீவில் தமிழிசைச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் அண்ணா சன சமூக நிலைய மண்டபத்தில் திரு. ச. சிவப்பிரகாசம் ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது.

சங்கீதபூஷணம் நா. சண்முகலிங்கத்தின் தேவார ஆராதனையுடன் ஆரம்பமாகிய இக்கூட்டத்தில் சங்கீதபூஷணம் ஆ. நமசிவாயத்தின் மறைவு குறித்து 5 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மே மாத பிற்பகுதியில் மண்டைதீவில் ஒரு இசை விழா நடத்துவதெனவும், இசைவகுப்புக்களை நடத்துவதெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இச்சங்க உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. ச. சிவப்பிரகாசம், உபதலைவர்கள்: திரு. வே. நடராசா, திரு. மா. இராசலிங்கம், இணைச் செயலாளர்கள்: திரு. நா. சண்முகலிங்கம், திரு. நா. கனகலிங்கம், பொருளாளர்: திரு. சி. பாலசிங்கம் 15பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

......

## இ. தி. மு. க. கிளை அங்குரார்ப் பணம்

உடுப்பிட்டி, வெள்ளி

இலங்கைத் திராவிட முன்னேற்றக்கழகத்தின் புலோலிக் கிளை இ. தி. மு. க. நிதிக்குழுச் செயலாளர் திரு. எ. உ. தேவராசா தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. தலைவர் கழகத்தின் கொள்கைகளை விளக்கிம் பேசினார். இக்கிளையின் முப்பது உறுப்பினர்களில் 5 பெண்களும் இடம் வகிக்கின்றனர்.

புதிய நிர்வாகிகளாகக் கீழ்க் காண்போர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்-பண்டிதர் வீ. பரந்தாமன், செயலாளர்-திரு. வை. கணபதிப்பிள்ளை, துணைச் செயலாளர்-திரு. சோ. பாலச்சந்திரன், பொருளாளர்-திரு. சு. எட்வேட் மரியதாஸ், நிர்வாகசபை உறுப்பினர்கள்-திருவாளர்கள் - தமிழ்மணி, சி. இராமச்சந்திரன், அலின்ஸ், வே' சிவகுரு [illegible] இராஜதுரை.


புகையிலையும் காய்கறியும்

பயிரிடும் கமக்காரரே!

பொஸ்றின்

அழுக்கணவனையும் மற்றெல்லாக் கிருமிப்பீடைகளையும் ஒழிக்கவல்லது.

உடனே செயலாற்றும் சக்தி வாய்ந்த இந்த ரசாயனப்பொருளை அறுவடைக்கு முதல்நாள் வரை தெளிக்கலாம்.




ஷெல் ரசாயனப் பொருட்கள் பாவித்து அதிக உணவு பயிரிடு

ஷெல் ரசாயனப் பொருட்கள

SHELL

ரசாயனபபொருளை கினையுங்கள், ஷெல்லை நினையு 'அலமெறகஸ்', 'டீல்றெக்ஸ்' 20, 'டீல்றெக்ஸ எக்ஸ்டரா', 'ஆகொடீன்', 'என்றெக்ஸ்' 20, 'பிட்றின்', 'மலதியன்', 'சுமத்தியன்', ஷெல களைப்புற்கொல்லி 'எம் 50', 'ஸ்டாம்' எப - 34, 'கிறமவின்', ஷெல் பீ. எச். சி 10% தூள் இவை ஷெல் ஸதாபனத்தாரின் விரிவான விவசாய ரசாயனப் பொருட்களில் சில மாத்திரமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

அகிம்சை வன்முறையைவிட பன்மடங்கு உயர்ந்தது. தண்டனை விதிப்பதைவிட மன்னிப்பதுதான் ஆண்மைக்கு அழகு.

— மகாத்மா காந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily

Telegram: "EELANADU" Jaffna.

Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமியவருஷம் சித்திரை மாதம் 7-ந் திகதி (19-4 69)


## யார் இதற்குப் பொறுப்பு?

'தின்னமல் உண்ணமல் அண்ணமலைக்கு...' என்று தமிழில் ஒரு கிராமியப்பழமொழி இருக்கிறது. நமது கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனத்தின் செயல்கள் சில இந்தப் பழமொழியைத்தான் நினைவூட்டுகின்றன. ஓர் இருத்தல் வெள்ளைப்பூடு இப்போது கடைகளில் ஒரு ரூபாய் எண்பது சதமாக விற்கப்படுகிறது. அதுவும் பாவனைக்கேற்ற நல்ல பூடு கிடைப்பதில்லை. இதேசமயம் பாவனைக்கேற்ற சில நல்ல பூடுகளையும் சேர்த்து தினசரி 500 அந்தர் பூடு தீவைத்துக் கொளுத்தப்படுகிறதாம். மொத்தம் பன்னிரண்டாயிரம் அந்தர் வெள்ளைப் பூடு பாவனைக்கற்றதாகி விட்டதால் அவற்றைத் தீயிட்டு அழிக்க வேண்டிய அவசியம் கூ. மொ வி. ஸ்தாபனத்துக்கு ஏற்பட்டுள்ளதாம். இதனல் அரசங்கத்துக்கு இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் ரூபாய் நஷ்டமேற்படுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நஷ்டம் ஏற்படக் காரணம் என்ன, இதற்கு யார் பொறுப்பு?

வெள்ளைப்பூடு நீண்ட காலத்துக்கு தேக்கி வைக்க முடியாத பொருள் என்பது கூ. மொ. வி. நிறுவனத்தாருக்குத் தெரியாதா? விரைவில் பழுதடையக் கூடியது வெள்ளைப்பூடு என்பதைத் தெரிந்திருந்தும் பெருமளவில் இதை வாங்கித் தேக்கி வைத்ததற்கு யாருடைய 'மூளை' காரணமோ! வெள்ளைப் பூடு ஓர் உப உணவுப்பொருள் மட்டுமல்லாது, சித்தஆயுள் வேத வைத்தியர்கள் மருந்து தயாரிப்பதற்கு உபயோகப்படுத்தும் ஒரு மூலிகை இனத்தைச் சார்ந்ததுமாகும் இங்கு சில சமயங்களில் வெள்ளைப் பூடு கிடைப்பது பெரும் கஷ்டம். ''மலிவான விலையில் கிடைத்தது அதனல்தான்

விலைக்காவது விற்று விநியோகம் செய்திருக்கலாம். ஆரம்பத்தில் அந்தர் 170 ரூபாவாகவும் பின்னர் 120 ரூபாய் 80ரூ. எனக் குறைக்கப்பட்டு கடைசியில் 40 ரூபாயாகவும் விற்றும் கூட 12,000 அந்தர் பூடு அழிக்கப்பட வேண்டிய அவசிய மேற்பட்டதென்றல் தேவைக்கேற்ற முறையில் பூடு கொள்வனவு செய்யப்படவில்லையென்பதையும் கொள்வனவு செய்த பின்னரும் நிலைமையை உணர்ந்து துரிதமாக அவற்றை விற்பனைசெய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்பதையுமே காட்டுகிறது சுருங்கச்சொன்னல்கூ. மொ. வி. நிறுவனத்தாருக்கு வியாபாரத் தந்திரம் தெரியாதது மட்டுமல்ல வியாபார அனுபவமும் இல்லையென்பது தெளிவு. இதே வர்த்தகத்தில் தனியார் ஒருவர் ஈடுபட்டிருந்தால், பூடு நல்லதா, கெட்டதா என்பதைப் பார்த்து,ஆராய்ந்து கொள்வனவு செய்திருப்பதுடன் ,,மார்க்கட் நிலபரம் ''பார்த்து மலிவான விலையில் தேவையை அறிந்து வாங்கி [illegible]திதமாக விற்பனை செய்து [illegible]லாபமும் ஈட்டியிருப்பார். அவரது சொந்த மூலதனத்தில் வர்த்தகம் செய்பவர் இலாபநஷ்டம் பார்த்து பல தடவை யோசித்தே வியாபாரம் செய்வார் கூ. மொ. வி. போன்ற நிறுவனங்களில் கடமையாற்றுபவர்கள் மாதச்சம்பளம்பெறும் அரசாங்க அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும். அவர்களுக்கு என்ன கவலை? எப்படியும் மாதச்சம்பளம் கிடைக்கும். நஷ்டம் அரசாங்கத்துக்கு அல்ல; பொதுமக்களுக்குத்தான்.

12,000 அந்தர் [illegible] பூடும் நெருப்புக்கிரையாக்காமல் அவை பாவனைக்குதவாமல்போகக்கூடுமென்பதை

# கலைஞன் சமுதாயத்தின் ஆணிவேர்

— சாவகச்சேரி எம். பி.

## செய்திச் சுருக்கம்

### 'தாய்நாட்டுக்காப்பு இயக்கம்'

அனுராதபுரம், வெள்ளி

''தாய்நாட்டு காப்பு இயக்கம்'' என்ற ஒரு புது இயக்கம் அனுராதபுரப் பகுதியில் இப்பொழுது உருவாகியுள்ளது. இப்பகுதியில் வாழும் இளைஞர்கள் பலர் ஒன்று சேர்ந்து ஆரம்பித்துள்ள இந்த இயக்கத்தின் நோக்கம் 'நாம் தமிழர்' இயக்கத்துக்கு எதிராகப் பிரசாரம் செய்வதும் இவ்வியக்கத்தினல் ஏற்படும் கஷ்டங்களில் இருந்து சிங்கள மக்களைப் பாதுகாப்பதுமாகும் எனக் கூறப்படுகிறது. அனுராதபுரம் புதியநகரில் இவ்வியக்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்துக்கு கொழும்பு, கண்டி ஆகிய இடங்களில் இருந்து பலர் கலந்துகொண்டனர்.

0 0 0

### ஆஸ்பத்திரியில் பொலிசார்

கல்முனை, வெள்ளி

இப்பொழுதுநாட்டின் பல பாகங்களையும் பாதித்துள்ள மலேரியா நோய் கல்முனைப் பொலிஸ் நிலையத்தையும் கடுமையாகப் பாதித்துள்ளது. கல்முனைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 13 பொலிஸ் சேவகர்கள் மலேரியாவினல் பீடிக்கப்பட்டு கல்முனை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இப்பகுதி மக்கள் மலேரியா மருந்து தெளிப்பதற்கு ஆதரவு கொடுக்காததே இங்கு மலேரியா கடுமையாகப் பரவுவதற்குக் காரணம் எனப் புகார் தெரிவிக்கப்படுகிறது

0 0

### வலம்புரிச் சங்குகள் எடுக்கப்பட்டன

எருக்கலம்பிட்டி, வெள்ளி

எருக்கலம் பிட்டியிலுள்ள ஆமைப்படுக்கை கடலில் கடல் படுதிரவியங்களை சேகரிப்பதில் கடந்த ஒருமாதகாலமாக சுழியோடிகள் மிகந்தீவுரமாகத் ஈடுபட்டுள்ளனர். இதிரவியங்கள் [illegible] தொழிலில் ஈடுபடும் மக்கள் தொகையும் பெருமளவில் கூடிக்கொண்டே வருகிறது. கடந்த வாரத்தில் பெரும

# இல்லை என்ற சொல்லை இல்லாமல் செய்தான் பாரதி

— கலாநிதி கைலாசபதி

[இம்மாதம் 15-ம், 16-ம் திகதிகளில் சாவகச்சேரி இலக்கிய மன்றத்தால், றிபேக் கல்லூரியில் நடாத்தப்பட்ட ஆண்டு நிறைவு விழா சொற்பொழிவு இங்கு தொகுத்துத் தரப்படுகின்றது.]

சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் பேசியது:-

''கலைஞன் ஒரு சமுதாயத்தின் ஆணிவேர். எந்த நாட்டிலே மறுமலர்ச்சிஉண்டோ? அந்த நாட்டின் மறுமலர்ச்சிக்குக் காரணம் ஒரு கலைஞனகத்தான் இருக்கமுடியும். அறிஞர் அண்ண தமது அரியகருத்துக்களையும், சீரிய தத்துவங்களையும் நாட்டுமக்கள்மத்தியில் புகுத்துவதற்கு கலைஞர்களையே கருவியாகக் கொண்டார்.

அண்ணவின் சீரிய கருத்துக்களை புகுத்திய கலைஞர்களுள் முக்கியமானவர் கலைவாணர் என். எஸ். கே. இன்று நமது நாட்டிலும் மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு கலைஞர்கள்தான் முன்னின்று உழைக்கவேண்டும்.

இன்று நமது மத்தியில் எத்தனையோ கட்சிகள் இருந்தாலும் அவர்களுக்குள் கருத்து வேற்றுமைகள இருந்தபோதிலும் மக்கள் மத்தியில் ஏற்றத் தாழ்வுகள் கூடாது என்ற ஒரே கருத்தையே சகல கட்சிகளும் அடிப்படைக் கொள்கையாகக் கொண்டுள்ளன.

இச்சீரிய தொண்டை நமது கலைஞர்களும் முன்நின்றுசெய்யக் கடமைப்பட்டவர்கள். கலைஞர்களுக்கு இதே கருத்தைத்தான் திரு. ம. பொ. சி.யும் கூறியுள்ளார். ஒரு நாட்டிலே அரசியலிலோ, புதிய சமுதாயத்திலோ மறுமலர்ச்சி தேவையானல், இம்மறுமலர்ச்சி, ஒன்றுபட்ட உயர்வு தாழ்வு அற்ற நல்ல சமுதாயத்தை உருவாக்கும் கலைஞர்களால் தான் முடியும்.

'கும்பகர்ணனின் குணச்சிறப்பு' பற்றி வித்வான் மு. சபாரத்தினம் பேசியது:-

கும்பகர்ணன் ஓர் கடமை வீரன். நன்றிக்கடன் தீர்க்க [illegible] வியை கவர்ந்தது அறமல்ல என்ற [illegible] ணன் இராவணனுக்கு போதித்தவன். இருந்தும்

''கடந்த 400 ஆண்டுகளாக நமது நாடும், இனமும் அந்நியர் பிடியிலிருந்தது மட்டுமன்றி, சுதந்திரமுமின்றி இருந்ததற்குக் காரணம், உலக நாடுகளைப் போன்று எமது மத்தியில் சம உரிமை காக்கப்படாததே. இலங்கை சம உரிமை கைக்கொள்ளாது, நமக்குள் நம்மை நாமே கூறுபோட்டுக்கொள்வதினல் தான் கல்வி, அரசியல், பொருளாதாரங்களில் பின்தங்கியுள்ளது.

இன்று உலகில், ஆசிய நாடுகளில் ஜப்பான் முன்னணியில் நிற்கின்றது.''

கலாநிதி க. கைலாசபதி ''இலக்கியமும் புதுமையும்'' பற்றிப் பேசியதாவது:

''இலக்கியத்தில் புதுமை பழமையென்பது வரலாற்றுக்காலந்தொட்டே இருந்து வருகின்றது. புதுமையைத் தன் வாழ்வில் புகுத்தவேண்டும் என்ற உணர்ச்சியே பாரதியை ஒரு புதுமைக் கவிஞனக்கியது.

பாரதி, தான் மட்டுமல்ல. தனது சமூகம் மட்டுமல்ல, அகில உலகமுமே வாழ வேண்டுமென விரும்பினர். இன்று மக்கள் மத்தியில் தோன்றும் உணர்ச்சி வேகத்தை அன்றைய இலக்கியத்தில் புகுத்தியவன் பாரதி. அவன் தன் வயிற்றை நிரப்புவதற்காக இதில் ஈடுபடவில்லை. உலகின் வளர்ச்சிக்காகவே இதில் ஈடுபட்டான்.

''இல்லை என்ற சொல்லை உலகில் இல்லாமல் செய்வேன்'' என்பதே பாரதியின் இலட்சியம்.''

இலக்கிய கர்த்தாக்களிடையே இந்த உணர்ச்சி ஊன்றவேண்டும்.

செல்வி கு. புவனேஸ்வரியும் பேசினர்.

கவிஞர் இ. முருகையன் தலைமையில் 'இன்னும் [illegible]' பொருளில் நடந்த கவியரங்கில் [illegible] திருவாளர்கள் வே. [illegible]குமாரசாமி, இ. சிவானந்தன் க. கணபதிப்பிள்ளை,

## இந்திராவுக்கு காஞ்சிபுரம் அன்பளிப்பு

சென்னை, ஏப். 18

தமிழ்நாட்டில் வரட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவதற்காக வந்திருந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்திக்கு செய்யாறு மக்கள் சார்பில் தமிழ்நாடு சட்டசபை சபாநாயகர் புலவர் கோவிந்தன் காஞ்சீபுரம் பட்டுப்புடவையொன்றை பரிசாகக் கொடுத்தார்.

## கோஷ்டிச் சண்டை

நல்லூர், வெள்ளி

வாய்ப்பேச்சுடன் ஆரம்பமான பெண்களும், ஆண்களும் கலந்து கொண்ட கோஷ்டிச் சண்டையொன்று இறுதியில் கல்வீச்சிலும், கைகலப்பிலும் முடிவடைந்ததாம்.

கொழும்புத் துறைப் பகுதியில் கடந்த இரவு நடைபெற்ற இச் சம்பவத்தில் காயத்துக்குள்ளான லெட்சுமிப்பிள்ளை என்பவர் சிகிச்சை பெறுவதற்காக யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இது சம்பந்தமாக 15 வயது.வாலிபர்ஒருவரும்பெண்ணெருவரும் உட்பட மூவரைப் பொலிசார் தேடிவருகின்றனர்,

கரையூர் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள்கள் கருணசேனவும், கூறேயும் புலன் விசாரணை நடாத்தி வருகின்றனர்

## அல்லாரை...

([illegible] தொடர்ச்சி)

துக்கொண்டிருந்தோம். 1-ம் எதிரியின் வீடு தோட்டத்திற்குப்பக்கத்திலுண்டு. அப்போது வெடிச்சத்தம் கேட்.

## நாட்டிலும் நகரிலும்

தமிழரசுக்கட்சியினர் தேசிய அரசாங்கத்திலிருந்து விலகியதுபற்றி உள்ளூர் அமைச்சர் திரு. பிரேமதாசா ஓர் அழகான உவமை தீட்டியிருக்கிறா.

தமிழரசுக்கட்சி என்ற பெண்மணி ஐக்கியதேசிய கட்சியை மணம்செய்து கொண்டாளாம். கணவன் டட்லிசேனநாயகா தான் என்பதை சொல்லவேண்டியதில்லை. நாலு வருடங்கள் இன்பமாகக் கழிந்தன. இளம்காதலர்கள் ஒருவருக்கொருவர் இன்பத்தேன் ஒழுகும் இனிய கதைகளைப் பேசிப் பேசி இல்வாழ்க்கை நடத்தினர்களாம். இடையிலே இந்த தம்பதிகளுக்கிடையில் சச்சரவு ஏற்பட்டுவிட்டது.

எதனல் ஏற்பட்டது? தமிழ்ப் பெண்மணிகளுக்கு மிகவும் ஆசையான காஞ்சிபுரம் பட்டு,கண்ணுக்குகந்த மணிமாலைகள். மாடமாளிகைகள், கூடகோபுரங்கள் இந்தியாதி திரவிய வஸ்துக்களை அந்த தமிழரசுக் கட்சி என்ற பெண்மணி கேட்டுவிட்டாள். அன்பின் கணவரான டட்லி சேனநாயகாவுக்கும் இந்த வஸ்துகளை சேகரித்துக்கொடுக்கும் வல்லமை இருக்கவில்லை. அவர் கமத்தொழிலே கண்ணகிருர். தமது அருமருந்துள்ள மனையாட்டியின் அபிலாஷைகளை அவரால் தீர்த்துவைக்க முடியவில்லை. அவர் தினமும் மண்வெட்டியும் கோடரியுமாக காட்டை வெட்டி நாடாக்கி கானகங்களை திருத்தி எடுக்கும் திருப்பணியில் ஈடுபட்டிருந்தார். நாடு வளம்பெற வேண்டும், அப்பொழுது தான் மனைவி, மக்கள், சுற்றத்தார், எல்லோருக்கும் வயிருர உணவு அளிக்கலாம் என்ற ஒரேயொரு சிந்தனையில் மூழ்கி தமது இல்லாளின் கோரிக்கைகளை அவர் நிறைவேற்ற தவறிவிட்டார்.

அவள் பொறுத்திருப்பாளா? ஒருவருடம் பொறுத்தாள், இரண்டு வருடம் பொறுத்தாள். மூன்ருவது வருடம் வந்துவிட்டது; தாங்கமுடியவில்லை. ஏதாவதொரு முடிவுக்கு வர வேண்டுமென்று தீர்மானித்துவிட்டாள். [illegible]

உடனடியாக விவாகரத்து செய்துகொண்டாள் தமிழரசுக் கட்சி என்ற தமிழ்ப்பெண்.

இப்பொழுது அவள் ஒரு கணவனில்லாதபெண். இனிமேல் என்ன செய்யப்போகிருள்? வேறொரு கணவனை தேடிப் பிடித்துக்கொள்வாளோ அல்லது பழைய படி தன் சொந்த கணவனையே தழுவிக்கொள்வாளோ? இதுபற்றி எவரும் ஜோசியம் கூறமுடியாது. இப்படியெல்லாம் மந்திரி பிரேமதாசா தமது கற்பனையை கலக்கிவிட்டிருக்கிருர்.

பிரேமதாசரின் கற்பனை நன்ருகத்தானிருக்கிறது. ஆனல் அவர் ஒரு நல்ல வார்த்தையையும் இடையில் கூறிவைத்திருக்கிருர். அதாவது தமிழரசுக்கட்சிக்கும் ஐக்கியதேசியக்கட்சிக்கும் பிறந்த குழந்தையான தேசிய ஒற்றுமையை, தாய் கவனிக்காமல் விட்டுவிட்டாலும், தந்தையான டட்லி அவர்கள் கவனித்துக் கொள்வாராம்.

இது ஓரளவுக்கு நம்பிக்கைதரும் விஷயமாகும். பாவம், இந்த தேசிய ஒற்றுமை பலகாலமாக அல்லல்பட்டு வருகிறது. அதை ஆதரிப்பார் எவருமில்லை. தாயும் தகப்பனும் சண்டைபோட்டால் அது எவருமில்லாத அனதைதானே!

தமிழ்ப்பெண் மறுபடியும் கணவனேடு சேர்ந்து கொள்வாளா ? விவாகரத்து செய்து கொண்டவர்கள் மீண்டும் மணம் செய்துகொள்வது புதினமான சம்பவமல்ல. அல்லது கணவனை வேண்டவேவேண்டாமென்று வேறொருவனை மணந்துகொள்வாளா? அப்படியானல் முதலாவது புத்திரனின் கதி என்னவாகும்.

இதுகளைப் பற்றி நாம் ஏன் கவலைப்படவேண்டும். கணவன் மனைவி சச்சரவுகளில் நாம் தலைப்போட முடியுமா, முடியாதா?

— வழிப்போக்கன்.

## மரண அறிவித்தல்

[illegible] சொர்ணலிங்கம் கோப்பாய் பொலிசைச் சேர்ந்த சொர்ணலிங்கத்தின் மனைவியும் புங்குடுதீவு செல்லத்துரையின் மக

தீரோ!' என்று சோக பாவத்தில் பாடத் தொடங்கி, 'உங்களை நான் அணைத்துக்கொண்ட பலா

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மலிவாக, சித்தஆயுள் வேத வைத்தியர்கள் மருந்து தயாரிப்பதற்கு உபயோகப்படுத்தும் ஒரு மூலிகை இனத்தைச் சார்ந்ததுமாகும் இங்கு சில சமயங்களில் வெள்ளைப் பூடு இடைப்பது பெரும் கஷ்டம். ''மலிவான விலையில் இடைத்தது அதனால்தான் இவ்வளவு பெருந்தொகையாக வெள்ளைப்பூடு கொள்வனவு செய்யப்பட்டது'' என்று சமாதானம் கூறப்படலாம். கொள்வனவு செய்தபோதே, நீண்ட காலம் இதைத் தேக்கிவைக்க முடியாதென்பதை உணர்ந்து அவற்றைத்துரிதமாக கூட்டுறவுச் சங்கங்களுக்கோ, தனியார் துறையினருக்கோ கொள்முதலை விட குறைந்த

க்கு என்ன கவலை? எப்படியும் மாதச்சம்பளம் இடைக்கும். நஷ்டம் அரசாங்கத்துக்கு அல்ல; பொதுமக்களுக்குத்தான்.

12,000 அந்தர் வெள்ளைப் பூடும் நெருப்புக்கிரையாக்காமல் அவை பாவனைக்குதவாமல்போகக்கூடுமென்பதை முன்னரே அறிந்து பங்கீட்டரிசியுடன் இலவசமாக வழங்கியிருந்தால்கூட பலருக்கும் மனஆறுதல் ஏற்பட்டிருக்கும்.

பொதுமக்களின் பணம் அநியாயமாக தீக்கிரையாகாமல் தடுப்பதற்கு இனியாவது கூ. மொ. வி. போன்றநிறுவனங்கள் முன்னெச்சரிக்கையாக நடந்துகொள்ளுமா?

## ஆபத்தான அறிகுறி

தி. மு. கவின் பிரசாரக் கருவிகளென வர்ணிக்கப் படும்தென்னிந்திய தமிழ்ப் படங்கள் இங்கு இறக்குமதி செய்யப்படுவதை முற்றாகத் தடைசெய்ய வேண்டுமெனக் கோரும் தீர்மானமொன்று தெகிவளை-கல்கிசை மாநகர சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியிருக்கிறது. இத் தீர்மானத்தைக் கொண்டுவந்த திரு. எஸ். டி. எஸ். ஜயசிங்கா தி. மு. க. ஆபத்து பற்றியும் நாம் தமிழர்' இயக்கம் பற்றியும் பேசி சிங்கள மக்கள் ஐக்கியப் பட்டு இந்த ஆபத்துக்களைச் சமாளிக்க வேண்டுமென்றும் பேசியிருக்கிறார். தென்னிலங்கையில் உள்ளூராட்சி மன்றங்கள் சில தமிழ்த் திரைப்படங்களையும் இங்கு தி. மு. கழகம், 'நாம் தமிழர்' இயக்கம் ஆகியவைகளையும் தடைசெய்ய வேண்டுமெனவும் கோரித் தீர்மானங்கள் நிறைவேற்றி வருகின்றன. அரசியல் இலாபத்தைப் பின்னணியாகக் கொண்டு திட்டமிட்ட முறையில் நடைபெற்று வரும் பிரசாரம்தான் இவை என்று கருத இடமுண்டு.

நாட்டுக்குத் தீங்கான எந்த இயக்கங்கள், ஸ்தாபனங்கள் மீதும், அவை தேச விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன என்பதைக் கண்டறிந்த பின், தகுந்த நடவடிக்கை எடுக்கவும் அவற்றைத் தடைசெய்யவும் அரசாங்கம் முன்வந்தால் யாரும் தவறு சொல்வதற்கு இடமில்லை.

இ. தி. மு. க. பற்றி இரகசியப் பொலிசார் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். ஆபத்தான செயல்களில் அது ஈடுபடவில்லை என்பது அந்த அறிக்கையின் சாரம். இ. தி. மு. கழகத்துக்கும் இந்திய தி. மு. கழகத்துக்கும் தொடர்பில்லையென்று இருதரப்பினரும் தெளிவாக்கி விட்டனர். ''நாம் தமிழர் இயக்கம்'' என்பது இப்போது எங்குமே இல்லை.

இப்படி நிலைமை தெளிவு படுத்தப்பட்டும் தமிழர் பற்றி துவேஷப் பிரசாரம் நடைபெறுவது ஏன், இதை அரசாங்கம் இன்னும் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருப்பது ஏன்?

இதன் விளைவு பாரதூரமானதாக உருவெடுக்கலாம் என்பதற்கு, ''உடவளவை பலநோக்கத் திட்டம் குட்டி யாழ்ப்பாணமாகி விட்டது. உயர் பதவிகளிலும், நிர்வாகப் பகுதிகளிலும் தமிழர்களே இருக்கின்றனர்'' என்று திஸ்ஸமகாராம எம். பி. கூறியிருப்பது உதாரணம்.

எந்தப் பதவிக்கும் இன அடிப்படையில் நியமனம் நடைபெறுகிறதா? அரசாங்கம் நிலைமையைத் தெளிவாக்கி வகுப்புத்துவேஷம் வளரும் ஆபத்தான அறிகுறிகளை முளையிலேயே கிள்ளிவிட வேண்டும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

ரிப்பதில் கடந்த ஒருமாத காலமாக சுழியோடிகள் மிகத்தீவிரமாகத் ஈடுபட்டுள்ளனர். இத்திரவியங்கள்

தொழிலில் ஈடுபடும் மக்கள் தொகையும் பெருமளவில் கூடிக்கொண்டே வருகிறது. கடந்த வாரத்தில் பெறுமதியான இரு வலம்புரிச்சங்குகளை சுழியோடிகள் கண்டெடுந்துள்ளனர். இதனால் வெளியூர் சுழியோடிகளின் தொகையும் வரவர அதிகரித்துக்கொண்டே வருகிறது. இத் தொழில்மூலம் பெறப்படும் பட்டிச்சங்குகள் போன்ற உயர்ந்தரக பொருட்கள் இந்தியா பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளதாகத் தெரிகிறது.

0 0 0

## ரூபா 20,40,000 நட்டம்

கோட்டை, வெள்ளி

இப்பொழுது தினமும் 500 அந்தர் வெள்ளைப்பூடு கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்தால் கொளுத்தப்படுகிறது. சுமார் ரூபா 20,40,000 பெறுமதியான 12 ஆயிரம் அந்தர் மாளிகாவத்தைப் பண்டகசாலையில் அழிக்கப்படவிருக்கிறது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் கூ. மொ. வி. நிலையத்தால் இறக்குமதி செய்யப்பட்ட பெருந்தொகையான இப்பூடு நீண்டகாலமாக தேங்கிக்கிடந்ததால் பழுதடைந்துள்ளது. இதனால் இவ்வாறு அழிக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளது. இதற்கு விற்பனைத் திறமையின்மை காரணம் எனவும் கருதப்படுகிறது. இப்பொழுது கொளுத்தப்படும் வெள்ளைப்பூடில் கால் பகுதி பழுதடையாத வெள்ளைப்பூடு எனவும் கருதப்படுகிறது. இதுசம்பந்தமாகச் சில தொழிற்சங்கங்கள் பிரதமர், வர்த்தக அமைச்சர் ஆகியோருக்கு புகார் செய்யவுள்ளதாகவும் தெரிகிறது.

0 0

## கருப்புகண்ணாடிகள் அணியவேண்டாம்

கோட்டை, வெள்ளி

இ. போ. ச. சாரதிகளைக் கறுப்புக்கண்ணாடிகளை அணிய வேண்டாமென மேலிடம் அறிவித்துள்ளது. தடிப்பான 'பிரேம்' போடப்பட்ட கண்ணாடிகளை யணிவதால் கண்பார்வைக்கு கெடுதல் ஏற்படுகிறதாம். இதுவே இந்த புதிய முடிவு எடுக்கப்பட்டதற்கு காரணம் என இ. போ. ச உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சிறப்பு' பற்றி வித்வான் மு. சபாரத்தினம் பேசியது:-

கும்பகர்ணன் ஓர் கடமை வீரன். நன்றிக்கடன் தீர்க்க

வினைய கவர்ந்தது அறமல்ல என்ற உண்மையை அண்ணன் இராவணனுக்குப் போதித்தவன். இருந்தும் விபீஷணன் இவனை இராமர் பக்கம் சேரும்படி கேட்டுக்கொண்டதற்கு, என்னை வளர்த்த அண்ணன், என்னைப் போர்க்கோலம்பூண்டு அனுப்பிவைத்திருக்கிறான். அவன்பக்கம்நின்று மடிபவன் என்றும் அபலவன் பக்கம் சேரமாட்டேன் என்றும் கூறியவன் கும்பகர்ணன்.

'இலக்கியமும் இலட்சியமும்' பற்றி திரு, வி. பொன்னம்பலம் எம். ஏ, பேசியதாவது:

இன்று வாழ்க்கை வாழ்வதற்கே என்று கூறுவோரும் உண்டு. காயமேஇது பொய்யடாகாற்றடைத்தபையடா என்று கூறுவோரும் உண்டு. எனவே இந்த இரண்டு சாராரினதும் அடிப்படை நோக்கம் நீண்ட செம்மையான வாழ்வு வாழ்வதுதான். எல்லாம் ஊழ்வினைப்படிதான் நடக்கும் அதை ஜெயிக்க யாராலும் முடியாது என்று கூறிய வள்ளுவரே ஒரு இடத்தில் தனது 'பிளேட்டை' மாற்றி மன உறுதியும், வல்லமையும் உடையவன்தான் சிறப்புடன் வாழ்வான் என்கிறார்.

நாம் மனிதர்கள் ஆகவே நாம் வாழ்வதுடன், நமது மக்களும் செம்மையாக வாழவிருப்பதே இலக்கணங்களின் இலட்சியமாக இருக்க வேண்டும்.

நமது இலக்கியங்களின் சிந்தனைகள் ரொக்கட் வேகத்தில் சென்று கொண்டிருந்தாலும் நடைமுறைகள் பின்னோக்கியே சென்றுகொண்டிருக்கின்றன.

திரு. எஸ். ஸ்ரீநிவாசன் எம். ஏ. தலைமையில் நடைபெற்ற முதலாம்நாள் விழாவில் திருவாளர்கள் ஆர். ஜெயரட்ணராஜா, அ. சண்முகதாஸ் ஆகியோரும் பேசினார்கள்.

திரு. தி. தருமலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. க. நாகராஜா நன்றி தெரிவித்துப் பேசினார். திரு. நவரத்தினம் எம். பி. நாதஸ்வர மேதை திரு. மு. பஞ்சாபிகேசனுக்கு தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவித்தார்.

இரண்டாம் நாள் விழா திரு. கு. நேசையா எம். ஏ. தலைமையில் நடைபெற்றது. ஆசிரியர் திரு. இ. கனகசபாபதி வரவேற்புரை நிகழ்த்தினார்.

திரு. நேசையா தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:

செல்வி கு. புவனேஸ்வரியும் பேசினார்.

கவிஞர் இ. முருகையன் தலைமையில் 'இன்னும்

பொருளில் நடந்த கவியரங்கில் திருவாளர்கள் வேலுமாரசாமி, இ. சிவானந்தன் க. கணபதிப்பிள்ளை, காரை. செ. சுந்தரம்பிள்ளை அரியாலையூர் ஐயாத்துரை ஆகியோர் கலந்துகொண்டனர். ஆசிரியர் திரு. இ. இராஜகோபால் நன்றி தெரிவித்துப் பேசினார்.

இரண்டு நாட்களும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## ஆணாக மாறும் பெண்

புலோலி, வெள்ளி

நாகர்கோவிலைச் சேர்ந்த வி. கனகர் என்ற மீனவரின் மகளான (34 வயது) நாகரத்தினம் என்பவர் தாம் ஆணாக மாறிவருவதாகத் தெரிவித்துள்ளார். இப்பெண் சிறுவயதில் கொழும்பில் ஒரு வீட்டில் வேலைக்காரப் பெண்ணாக இருந்ததாகவும் அப்பொழுது குறளி வித்தைக் கோஷ்டியினருடன் சேர்ந்து வித்தைகள் காட்டி வந்ததாகவும், சில காலங்களின் முன் ஒருவரை மணம் செய்துகொண்டு வாழ்க்கை நடத்தி வந்ததாகவும், விவாகமாகி இருவருடங்களில் கணவனுக்குத்தன் மீது கசப்பு ஏற்பட்டு பின்னர் அவர் வேறு பெண்ணை மணந்து கொண்டதாகவும் கூறும் இப்பெண், கடந்த இருவருடங்களுக்கு முன் தாம் ஆணாகமாறி வருவதற்கான அறிகுறிகளை உணர்ந்ததாகவும் சொன்னார்.

## கூட்டணி மேதினம்

யாழ்ப்பாணம், சனி

வழமைபோல இவ்வருடமும் மேதினத்தைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஒழுங்குகளைக் கூட்டணிக் கட்சியின் யாழ்ப்பாணக் கிளை ஒழுங்குசெய்து வருகின்றது.

நல்லூரிலிருந்து ஊர்வலம் ஒன்றையும் நடாத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

திரு. வி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் திருவாளர்கள் லெஸ்லி குணவர்த்தனவும், பீட்டர் கெனமனும் கலந்துகொள்ளவிருக்கிறார்கள். மைத்திரிபால சேனநாயக்காவுக்கும், பதியுதீன் முகம்மதுக்கும் கூட்டத்தில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (கா. நி)

ம், கூறியும் புலன் விசார ணை நடாத்தி வருகின்றனர்

## அல்லாரை...

துக்கொண்டிருந்தோம். 1-ம் எதிரியின் வீடு தோட்டத்திற்குப்பக்கத்திலுண்டு. அப்போது வெடிச்சத்தம் கேட்டது. 1-ம் எதிரியின் வீட்டுப் பக்கமாக வெடிச்சத்தம் கேட்டது. இறந்தவர் புகையிலைக்கன்றுகளுக்குள் விழுந்தார். வேலிக்குள்ளே காசிநாதர் துவக்கு வைத்துக் கொண்டிருந்தார். அவர் 1-ம் எதிரி வீட்டுக் கிழக்கு வேலிப்பக்கம்நின்றார். மற்ற எதிரிகள் அவருக்குப் பின்னால் நின்றார்கள். இறந்தவர் எழுந்து நான் நின்ற பக்கம் ஓடிவந்து விழுந்தார். 2-ம் எதிரியைத் தவிர வேறு எவரும் துவக்கு வைத்திருக்கவில்லை. 2-ம் எதிரி துவக்கை ராசாவிடம் கொடுத்துவிட்டோ, போட்டுவிட்டோ வந்தார். 3 ம் எதிரி துவக்கைக்கொண்டுஓடினார்போல தெரிந்தது. 2-ம் எதிரி கத்தியை எடுத்துக்கொண்டு தப்பிவிட்டான்' என்று 3 தடவை சொல்லிக்கொண்டு ஓடிவந்தார். நான் கொட்டிலில் கிடந்த கத்தியை தூக்கிக்கொண்டு 'வாடா பார்ப்பம்' என்றதும் 2-ம் எதிரி திரும்பிவிட்டார். விஞசித்தம்பி கட்டை ஒன்றை எடுத்து வைத்திருந்தார்.

நிலத்தில் சுடுபட்டு விழுந்துகிடந்த கார்த்திகேசு 'தண்ணீர்' என்றுகேட்டார். தண்ணீர் கொடுத்தேன். ஆஸ்பத்திரிக்கு அவரைக் கொண்டுபோகக் கார் பிடிக்கப் போனோம், காணியிலிருந்து வெளிக்கிடக்கூடாது. வெளியே வந்தால் கொலை செய்வோம். என எதிரிகள் பயமுறுத்தினர். எதிரிகள் 1 மணித்தியாலம் நின்றார்கள். பின்னர் காணவில்லை. கார்த்திகேசு இறந்துவிட்டாரென்றுஅங்கு போயிருக்க வேண்டும். அங்குவந்த வல்லிபுரத்திடம் விஷயத்தைச் சொன்னேன். 1-ம் எதிரி கிராம சபை உறுப்பினராக இருக்கிறார். தேர்தல் சம்பவத்திற்கு ஒருமாதம் முன்பு நடந்தது. அவருடன் கனகசபை என்பவர் போட்டியிட்டார். இறந்தவரும் நானும் கனகசபையை ஆதரித்தோம்.

கே. சுப்பிரமணியம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது சம்பவதினம் காலை 9மணிக்கு காணிக்குப் போனேன். வரும்போது சாட்சியமளித்த கார்த்திகேசுவையும் விஞசித்தம்பியையும் தோட்டத்தில் கண்டேன். இறந்தவரையும் கண்டேன். யாரோ சுட்டுப் போட்டார்களென்றும், இற

தாங்கமுடியவில்லை, ஏதாவதொரு முடிவுக்கு வர வேண்டுமென்று தீர்மானித்தவள்

திரோ!' என்று சோக பாவத்தில் பாடத் தொடங்கி, 'உங்களை நான் அணைத்துக்கொண்ட பலாபலன் இதுதானா? தாலி கட்டும்போது சொன்ன வாக்குறுதிகள் எல்லாவற்றையும் மறந்துவிட்டு இப்பொழுது என்னை நட்டாற்றில் தத்தளிக்கும் கட்டுமரம்போல தவிக்கவைத்து போயே போய்விட்டீர்களே என்று பிலாக்கணம் வைத்தாள். இனிமேல் அவருடைய சகவாசமே வேண்டாம் என்று முடிவுசெய்து

## சுயேச்சை

அனுராதபுரம், வெள்ளி

கடந்த வார இறுதியில் நடைபெற்ற கடவத்சதர கிழக்கு கிராம சபை தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எல்லோரும் சுயேச்சையாகப் போட்டியிட்டவர்களேயாவர். இக்கிராம சபையின் 14 அங்கத்தவர்களில் போட்டியின்றி ஐவர் தெரிவு செய்யப்பட்டனர்.

## 10 ஆயிரம்பேர் விண்ணப்பம்

கோட்டை, வெள்ளி

10000யட்டதாரிஉதவியாசிரியர் பதவிகளுக்கு 10000 பட்டதாரிகள் வேலைவிளம்பரப்படுத்தப்பட்ட ஒரு வாரத்துக்குள் கல்விஅமைச்சருக்கு விண்ணப்பித்துள்ளார்கள். நியமிக்கப்படும் ஆசிரியர்கள் மாவட்ட ரீதியில் நியமிக்கப்படுவதோடு இடமாற்றத்துக்குள்ளாக முடியாது என்ற நிபந்தனையின் பேரிலேயே நியமிக்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ந்தவரின் மனைவிக்கு சொல்லும்படியும் கார்த்திகேசு சொன்னார். எதிரிகளை அங்கு காணவில்லை. எதிரிகளின் பெயரை எனக்கு கார்த்திகேசு சொல்லவில்லை. எனக்கு வெடிச்சத்தம் கேட்டது நான்போய் இறந்தவரின் மனைவியிடம் சொன்னேன்.

வைத்திய அதிகாரி டாக்டர் கே. ஜே. சண்முகசுந்தரம் உதவி அரசாங்க ரசாயன பரிசோதகர் எஸ். சற்குணநாதன் ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

## தேவை

ஆண், பெண் பிள்ளைகள் வேலைக்குத்தேவை. நேரில் வரவும். சேவி கண்ணாடித் தொழிற்சாலை கோப்பாய்
946

## மரண அறிவித்தல்

பரமசாமி சொர்ணலிங்கம்
கோப்பாய் பொலிசைச் சேர்ந்த சொர்ணலிங்கத்தின் மனைவியும் புங்குடுதீவு செல்லத்துரையின் மகளும் டங்கெல்ட் ஆசிரியர் சோமசுந்தரம் உணவுக்கட்டுப்பாட்டுத் திணைக்கள குணரத்தினம் ஆகியோரின் சகோதரியுமான பராசக்தி திடீரென்று வியாழன் இரவு காலமானார். அவருடைய ஈமக்கிரியைகள் புங்குடுதீவில் நடைபெறும். 940

## ஒருமித்து கொண்டாட முயற்சி

யாழ்ப்பாணம், சனி

இடதுசாரித் தொழிலாளர் யாவரையும் ஒன்று சேர்த்து ஐக்கியமாக மேதினக் கூட்டத்தை நடத்தும் முயற்சியில் யாழ்ப்பாண மாநகரதுணை முதல்வரும் புரட்சிகர இலங்கைச் சமசமாஜக் கட்சி அங்கத்தவருமான திரு, ஆ. துரைராஜசிங்கம்இறங்கியுள்ளார்.

திரு துரைராஜசிங்கம் இது சம்பந்தமாக சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்

பாட்டாளித் தோழர்களின் உரிமைத் தினத்தை இடதுசாரித் தொழிற் சங்கங்கள் யாவும் ஒருமித்துக் கொண்டாட வேண்டுமென்பதே எனது பேரவா. எனவே ஐக்கிய மேதினக் கூட்டத்தை சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யு முகமாக வரும் 23-ம் திகதி மாநகர துணை முதல்வர் அலுவலகத்தில் பிற்பகல் 3 மணிககு நடைபெறும் ஆலோசனைக கூட்டத்தில் கலந்து யோசனைகள் தெரிவிககுமாறு அழைககின்றேன்.

ஐககிய மேதினக கூட்டத்தை யாழ் பழைய பஸ் நிலையத்தில் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிககப்பட்டுள்ளது.

## சொற்பொழிவு

புலோலி சனி

பொலிகண்டி கந்தவன ஆலயத்தில் இன்று பருத்தித்துறை ஸ்ரீ சாரதா நிலைய இரத்தினசபாபதியின் சமயச் சொற்பொழிவு நிகழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org